www.padippakam.com



# வெளி


## வெளியின் உள்ளே...

- எண்ணியதை... எண்ணியபடி... எழுதுகிறேன்
- போரின்மூலம் சமாதானம் சாத்தியமா?
- புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களும் தாய்மொழிக் கல்வியும்
- பிரான்சில் நடைபெற்ற 23வது இலக்கியச் சந்திப்பு
- ஆரிராரிரோ...ஆரிராரிரோ... ● மாணவர் பக்கம்
- பொறுக்கியவை ● பாலுமகேந்திரா:அழி யாத கோலங்கள் முதல் சதிலீலாவதி வரை
- சுழல் காற்றில் அணைந்துபோன................



OCTOBER 97

its

Veli

ஒக்ரோபர் 97 வெளி- 2


# கொழும்பில் குண்டு வெடிப்பு

## 17 பேர் மரணம்; இராணுவம் அதிர்ச்சி; விடுதலைப்புலிகள் மறுப்பு

சென்ற புதன்கிழமை 15.10.97 அதிகாலை கொழும்பின் சர்வதேச வர்த்தக நிலையத்தில் நடைபெற்ற பாரிய குண்டுவெடிப்புச் சம்பவம் இலங்கையின் இராணுவப்பாது காப்பு வட்டாரங்களின் மத்தியில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள் ளது. கொழும்பின் உல்லாசப்பய ணிகளுக்கான கலதாரி, ஹில்ரன் ஆகிய விடுதிகளையும் பெருமள வில் சிதைத்துள்ளது. பிரஸ்தாப குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 4 பிரி த்தானியப் பயணிகள் உட்பட 17 பேர்வரை மரணமடைந்துள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரி விக்கின்றன.

சென்ற ஆண்டு இலங்கை மத்தி யவங்கியில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து மிகத் தீவிரக் கண்காணிப்புப் பலப்படுத்தப்பட்ட நிலையில் மத்தியவங்கிக்கு 200 யார் தொலைவில் நடைபெற்ற இக் குண்டுவெடிப்பு பொதுமக்கள் மத் தியில் பெரும் பீதியைக் கிளப்பி யுள்ளது. சந்திரிகா அம்மையார் சமாதான முயற்சிகளை மேற் கொண்ட நிலையில் இடம்பெற்ற இக்குண்டுவெடிப்புச் சம்பவம் தமிழ் விடுதலை அமைப்பின் எதிர்ப்பி னைக் காட்டும் அடையாளமாக அர சியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் பிரித்தானிய மகா ராணியார் தமிழ்நாட்டில் விஜயம் மேற்கொண்டுள்ள இத்தருணத்தில் இலங்கையின் தலைநகரில் ஏற்பட்ட இச்சம்பவம் சர்வதேச அரசியலில் மிகுந்த கண்ணோட்டத்தைப் பெற் றுள்ளது.

# விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் :

## முன்னாள் PKK உறுப்பினர் தகவல்.



ஹசார்

கடந்த 28-09.97 ஞாயிறு லண்டனில் வெளியாகும் THE OBSERVER பத்திரிகையில் மேற்படி செய்தி வெளியா கியது. குர்திஸ் விடுதலை அமைப்பான PKK (Kurdistan Workers Party) இலிருந்து விலகியவரான ஹசார் என்பவர் PKK பற்றிய பல தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

PKK அமைப்பானது விடுதலைப் புலிகளுக்கு Greece இல் தயாரிக் கப்பட்ட 11 விமான எதிர்ப்பு ஏவுகணை களை விற்றதாக ஹசார் தெரிவித்திருக்கிறார்.

Stinger Missiles எனவழைக்கப் படும். இவ் ஏவுகணை களைப் பயன் படுத்தியே அண்மையில் 80 பேர் கொண்ட இலங்கை இராணுவ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்க லாம் என அப்பத்திரிகை தெரிவிக்கின்றது.

குர்திஸ் நாட்டில் பிறந்த ஜேர்மன் வாசியான ஹசார் PKK அமைப்பின் ஐரோப்பிய மக்களுக்கெதிரான நடவடிக் கைகள் பிடிக்காமை காரணமாகவே அவ்வமைப்பை விட் டுத் தப்பியோடியுள்ளதாகக் கூறியுள்ளார். மேலும் PKK யினர், ஜேர்மன் நியோ நாஸி, பலஸ்தீனிய ஹமாஸ் அமைப்பு, விடுதலைப் புலிகள் ஆகிய அமைப்புகளுடன் தொடர்புள்ளதாக சாடியுள்ளார்.

# ஆயுதக் கப்பலை புலிகளே கடத்தினர்

## சிம்பாவே பாதுகாப்பு அமைச்சர்

இலங்கை அரசின் ஜெயசிக்குறு நடவடிக்கைக்குப் பயன்படுத்தவென 32,400 ஷெல்களைத் தாங்கிவந்த சிம்பாவே கப்பல் புலிகளாலேயே கடத்தப்பட்டதென சிம்பாவே பாது காப்பு அமைச்சு(ZDI) அண்மையில் உறுதி செய்துள்ளது.

மேற்படி ஓடர் இலங்கை அரசால் ZDI ற்கு பெப்ரவரி மாதமளவில் கொடுக்கப்பட்டிருந்தது. ஒரு (80mm) ஷெல்லிற்கு $80(4640 ரூபா) படி 32,400 ஷெல்லுடனான கப்பல் கொழும்பை வந்தடைந்ததும் பணம் கொடுப்பதாக முடிவாகியிரு ந்தது. ஆனால் குறிக்கப்பட்ட தேதி தாண்டி பல வாரங்களாகியும் கப்பல் வராதிருக்கவே இலங்கை அரசு விபரம் அறிய முனைந்தது.

அதேவேளை ஜெயசிக்குறுப் படையினர் புளியங்குளத்தைக் கைப்பற்ற முனைந்த சண்டையில் புலிகளிடமிருந்து பெருமளவிலான 80mm ஷெல் தாக்குதலை எதிர் கொள்ள நேர்ந்தது. புலிகள் நாளொ ன்றிற்கு சராசரி 3000 முதல் 3500 வரையிலான ஷெல்களை ஏவியிருக் கின்றனர். ஒரு குறிப்பிட்ட நாள் மட்டும் 5,000 ஷெல்கள் ஏவப்பட்டி ருக்கின்றன. புலிகளிடம் 50 மோட் டார் பீரங்கிகள் இருப்பதாக நம்பப் படுகின்றது. இதில் 15 முல்லைத் தீவில் கைப்பற்றப்பட்டவை. புலிக ளின் தாக்குதலின் உக்கிரத்தையும் காணாமல் போன கப்பலையும் தொடர்புபடுத்திப் பார்த்தபோதே அரசினால் உண்மையை ஊகிக்க முடிந்தது.

புலிகளுக்கு இவ்வளவு ஷெல் கள் எங்கிருந்து கிடைத்தன என்ற மர்மம் இப்போது புலனாகியுள்ளது. சிம்பாவே அரசிற்கு இது $2,592,000 நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை அரசின் கொடூரத் தாக்கு தலுக்கு ஆயுத உதவி வழங்கிய அரசிற்கு இது ஒரு நல்ல பாடமா கவே அமையும்.


● ESTATE AGENTS ● LETTING MANAGEMENT ● PROPERTY MAINTENANCE

வீடுகளை வாடகைக்கு வழங்குவதில் EAST LONDON, ESSEX பகுதிகளில்
நம்பிக்கை, நாணயம் மிக்க சேவையை வழங்குவதில் முன்னணியில் திகழ்பவர்கள்!

WALTHAMSTOW BRANCH
252, Hoe Street, Walthamstow , London E17 3AX----Tel: 0181 520 9968, Fax: 0181 503 7661

EAST HAM BRANCH
213, High Street,
East Ham, London E6 1JD
Tel: 0181 472 0029, Fax: 0181 503 5996

TILKO
PROPERTY SERVICES

ILFORD BRANCH
101 Cranbrook Road
Ilford, Essex IG7 4PD
Tel: 0181-514 1422, Fax: 0181-553 3991


படிப்பகம்

www.padippakam.com




# வெளி

மாத இதழ்

ஒக்ரோபர் 1997

Veli
Publications Ltd
P O Box 14936
London N9 0WB
UK

Tel/Fax:
0181-672 8583


## என் குரல்

அன்புடன்

வெளி ஆசிரியர் குழுவினர்க்கு வணக்கம்.

தங்கள் இதழ் கண்டோம்! நன்றாக உள்ளது. இன்று புலம்பெயர் வாழ்வில் சிறு பத்திரிகைகளின் தேவை மிகமிக அவசியமானது தான்.

எனினும் வெறும் சமூகப்பொறுபபற்ற வியாபார பத்திரிகைகள் போல் வருபவை வெறும் குப்பைக் கூடைகள். இந்த வகையில் தங்களின் வெளி வித்தியாசமாக உள்ளது. இங்குள்ள சூழலை ரொம்பவும் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு கனதியான பார்வையோடு 'வெளி' வருகிறது என்பதை தங்கள் தலையங்கம் குறித்துரைக்கிறது.

அடுத்து வரும் இதழ்களில் தங்கள் கூற்று எவ்வளவு உண்மை என்று பார்க்கலாம். கே.எஸ்.துரை, வ.கீதாவுடனான பேட்டி, யமுனா ராஜேந்திரனின் ஆக்கம் இவைகள் விவாதத்திற்குரிய கருவைக் கொண்டிருக்கின்றன. எனினும் நான் எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன் எனும் கட்டுரைச் செய்திகளிலுள்ள சில முரண்கள் குறித்துப் பேசுகிறேன்.

அந்த ஆங்கில சஞ்சிகை எழுத்தாளரின் வரலாற்று அறிவை என்னவென்பேன். ரொம்பத்தான் அம்மாவுக்கு காவடி தூக்குகிறார்!

இற்றைவரை யாரும் சிங்கள அரசை எதிர்த்த தமிழ் பராளுமன்ற அரசியல் வாதிகள் உண்டா? பிறகேன் அரசு கொல்லணும்? ஆயின் வெலிக்கடைச் சிறையில் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டவர்கள் யார்? அவர் போட்ட பட்டியல்கள் சரிதாம். எனினும் அவையைக் காட்டி சிங்கள பாசிச அரசைச் சமன் செய்வது, கிட்லரையும் ஸ்டாலினையும் சமன்படுத்தும் சோரம்போன சில முற்போக்குகள் போல் இருக்கிறது. வாழ்க வழமுடன். அம்மாவின் கடைக்கண் உமக்குண்டு. ராஜன்கூலே மனோரஞ்சித மலருடன் வரவேற்று வெண்தாமரை ஆசி அருள்வார்கள். வெளியைக் குறுக்காதிருக்க வேண்டி விடைபெறும்

ப. வி. சிறீரங்கன். ஜேர்மன்



## வெளி1 இன் படத்திற்குரிய கவிதை

*குண்டடித்த கட்டடத்துள்*
*குமைந்திருக்கும் சிறுபூவே*
*சிவந்திருக்கும் கண்களிலே*
*சோகத்தின் தடம்புகளோ*
*யாருன்னை மீட்டெடுப்பார்*
*யுத்தத்தின் சேற்றிடையே*

V.ருபன்

# 'அயலார் தீர்ப்பு'

**சிறுவர் நாடக வரிசையில் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தினரின் மற்றுமோர் அரிய படைப்பு.**



நாம் லண்டனில்தான் இருக்கிறோமா? அல்லது ஈழமண்ணில் இருக்கிறோமா? என்று எண்ணுமளவுக்கு கிராமிய, நாட்டார் இசையுடன், கூத்து ஆட்டவடிவங்களை ஆடி, அழகுதமிழில் பேசி நடித்து பார்வையாளர்களின் உள்ளங்களை கவர்ந்து விட்டனர் சுமார் 35 லண்டன் தமிழ் சிறார்கள்.

கடந்த 28ம் திகதி ஞாயிற்றுக் கிழமை, அக்ரன் நகர மண்டபத்தில் நடைபெற்ற பிறென்ற் தமிழ்ச்சங்க கலைவிழாவில், தமிழ் அவைக் காற்று கலைக் கழகத்தின் தயாரிப்பில் இடம்பெற்ற 'அயலார் தீர்ப்பு' என்ற புதிய சிறுவர் நாடகத்தில்- அண்ணன், தம்பி பிணக்கென்றும், அக்கா தங்கை வழக்கென்றும் அந்நியரைத் தலையிட விட்டால், பெருங்கேடு தான் விழையும் என்ற கருத்தை, பல்வேறு அரசியல், சமூகப் பரிமாணங்களில் சிறுவர்களைக் கொண்டு சொல்லியிருக்கிறார்கள் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தினர். ஒரு அப்பத்தைப் பங்கிட குரங்கை அழைத்து, அப்பத்தை இழந்த இரண்டு பூனைகளின் கதையை ஆடல் பாடல்களுடன் கச்சிதமாக மேடைக்குக் கொண்டு வந்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இப்படியான நாடகங்களை பிறென்ற் தமிழ் சங்கத்தினருடன், தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தினர் கடந்த சில வருடங்களாக, 'வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்', 'தப்பி வந்த தாடி ஆடு', 'நம்மைப் பிடித்த பிசாசுகள்', 'மலைகளை அகற்றிய மூடக்கிழவன்' ஆகிய நாடகங்களை மேடையேற்றி வந்தமை குறிப்பிடத் தக்கது. அந்த வரிசையிலே 'அயலார் தீர்ப்பு' நாடகத்தை பேராசிரியர் சி.சிவசேகரம் எழுத, க.பாலேந்திரா நெறிப்படுத்தி உள்ளார். மேடை அமைப்பு, ஒப்பனை, உடைவண்ணம் ஆகியன க.கிருஷ்ணராஜாவின் கைவண்ணத்திலும், நடன கூத்து வடிவங்கள் ஆனந்தராணி பாலேந்திராவின் நெறிப்படுத்தலிலும் உருவாகி உள்ளன.


வாசகர்களிடமிருந்து விமர்சனங்களையும் படைப்புகளையும் எதிர்பார்க்கின்றோம்.
அனுப்பவேண்டிய முகவரி:
VELI
P.O. Box 14936
London N9 OWB
UK




# RADIO ASIA CANADA

## INTERNATIONAL TAMIL SERVICE

## சர்வதேச தமிழ் ஒலிபரப்பு

ஐரோப்பிய, ஆசிய, அவுஸ்திரேலிய நாடேங்கும் 24 மணி நேரமும் ஒலிக்கும் தமிழ்!

Astra Satellite Video Chanel -7 11.303 MHz
POLARISATION-H (Horizontal), Audio Frequency 7.38 MHz
www.radioasiacanada.ca REAL AUDIO




விளம்பரங்கள், வாழ்த்துக்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சிகள், உங்கள் கருத்துக்கள் ஆகிய அனைத்துக்கும்

முற்றிலும் இலகுவாகவும், இலவசமாகவும் கேளுங்கள். உலகெங்கும் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும், வாழ்த்துகள், அறிவித்தல்கள், பரந்துவாழும் உங்கள் உறவினர்கள், நண்பர்களை உடனுக்குடன் சென்றடையவும் தயங்காமல் எம்மை நாடுங்கள்.

S VIJAYAN
TEL: 0181-571 9282
OR 0956 396354
FAX: 0181-571 9282
(24 மணிநேரமும் உங்கள் தகவல்கள் பதிவுசெய்யப்படும்)




தலைமையக முகவரி:
RADIO ASIA CANADA 1- 680 PROGESS AVE, SCARBOROUGH, ONTARIO, MIH 3A5 CANADA
TEL: 00 1 416 289 1522 FAX: 00 1 416 289 1840

www.padippakam.com



# ‘வெளி’ யில் இருந்து...

அன்பான வாசக உள்ளங்களே!

எமது முதலாவது ‘வெளி’ பற்றி பல்வேறு தரப்பினரிடம் இருந்து பல்வேறுபட்ட அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும் விமர்சனங்களும் எம்மை வந்து அடைந்தன. அவை மேலும் எம்மை உற்சாகப்படுத்துகின்றன. இவற்றில் சில உண்மையான அக்கறையோடும் ஆர்வத்தோடும் முன்வைக்கப்பட்டவை. சில வேறு பல தன்மைகளுடன் அமைந்தன. எது எப்படி இருந்த போதும் இவற்றைத் தனது வளர்ச்சிக்கான படிக்கற்களாக வெளி அமைத்துக் கொள்ளும். வெளி தனது இளம் பருவத்திலேயே இருப்பதால் கோளாறுகள் அதிகம். பத்திரிகையின் வடிவமைப்பைப் பற்றி ஓரளவு திருப்தி உள்ளபோதும் உள்ளடக்கம் சம்பந்தமாய் நிறைய தவறுகள், ஆக்கப் பற்றாக்குறை, எழுத்துப் பிழைகள், வசனப்பிழைகள், ஜனரஞ்சக தன்மை இல்லாமை, எளிய நடையின்மை என்று நிறைய குறைகள் இருக்கின்றதை ஒத்துக் கொள்கின்றோம். ஒரு சில இதழ்களிலேயே இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யமுடியாது என்ற போதிலும் வருங்காலத்தில் இத்தகைய தவறுகளை களைய உறுதி பூண்டுள்ளோம். ஐரோப்பிய சூழலில் ஒரு பத்திரிகையை நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல என்பது பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களும் வாசகர்களும் நன்கு அறிவர். இந்த சூழ்நிலையில் வெளி போன்ற பத்திரிகையின் வருகையை பலரும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என வெளி கேட்டுக்கொள்கின்றது. பல்வேறுபட்ட பிரச்சனைகளையும் மக்களுக்கு விளங்கக்கூடிய எளிமையான நடையில் எழுதக் கூடிய பல எழுத்தாளர்கள் நம்மிடையே இருந்தும் ஆக்கப்பற்றாக்குறை என்பது கவலை அளிக்கக் கூடியது. எனவே அவர்கள் வெளியில் வந்து எழுத வேண்டுகின்றோம்.

அடுத்து இன்னோர் விடயத்தையும் குறிப்பிட வேண்டும். வெளி பத்திரிகையை சில நண்பர்கள் ஒரு மாற்று பத்திரிகை எனக் கருதிக் கொள்கின்றார்கள் போல் தெரிகின்றது. எமது முதலாவது இதழ் அவ்வாறான தோற்றத்தை ஏற்படுத்திவிட்டது என்பதை எம்மால் உணர முடிகிறது. இருந்தபோதும் வெளி ஒரு மாற்றுப் பத்திரிகை அல்ல. அது மக்களுக்கான வெகுஜன பத்திரிகையாக வளர வேண்டும் என்பதே எமது அவா. மாற்றுப் பத்திரிகை என்று கூறிக் கொண்டு குறுகிய பரப்பில் முடங்கிவிட வெளி விரும்பவில்லை. அது மக்களின் மன வெளிகளை சென்றடையவே விரும்புகிறது.

ooo

இலங்கைத் தீவின் இனவாத தீ முன்னர் எப்போதும் இருந்ததை விட குறைந்தபாடாக தெரியவில்லை. சமாதானத் தீர்வு என்பது குரங்கு கையில் பூமாலையாகிவிட்டது. பல மேடைகள் கண்ட சந்திரிகா அம்மையாரின் புத்தத்துடன் சமாதானம் என்ற நாடகம் உச்சகட்டத்தை அடைந்திருக்கின்றது. இந்த நாடகத்தின் கதை, வசனம், இயக்கம் என்பவற்றுடன் நாயகி வேடத்தையும் அவரே ஏற்றுள்ளார். நாயகி என்றால் நாயகர் இல்லாமலா? ஒருவர் அல்ல இருவர் இருக்கின்றார்கள். மூர்க்கத்தனமான சண்டைக் காட்சிகளில் சாகசம் புரியும் நாயகனாக அனுரத்தவத்த என்றால், சாந்த குணமும் சமாதான எண்ணமும் கொண்ட பாத்திரத்தில் பேராசிரியர் பீரிஸ் அவர்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போது இந்த இரு பாத்திரங்களின் குணச்சித்திரங்களையும் தானே ஏற்று திறம்பட நடித்து விடுகின்றார் நாயகி சந்திரிகா. சமீபத்திய அனுராதபுர நிகழ்ச்சிகளும் அதில் அவரது உரைகளும் இதை நன்கு புலப்படுத்துகின்றன. “இனப்பிரச்சனையை தீர்க்காவிட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலமே இல்லை”, “ஒரு பிரபாகரனை ஒழித்தால் பல பிரபாகரன்கள் தோன்றுவார்கள்” என்று ஒருபுறம் எதார்த்தமாக பேசுவதும் மறுபுறம் இந்த நாட்டின் சிறுபான்மை இனங்கள் வரலாறு இல்லாத வந்தேறு குடிகள் என்ற பாணியில் இனவாதத்தை கக்குகிறார். இப்படியாக தனது பாத்திரத்தில் தூள்கிளப்புகிறார். துரதிஸ்டம் என்னவென்றால் இதன் விளைவுகளை சில நாட்களுக்குள் அவர் எதிர்கொள்வது தான். தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதான பேச்சு கிளம்பியதும் இல்லாத ஊருக்கு போக வழிசொல்லும் தீர்வுத் திட்டத்திற்கு எதிராக சிங்கள ஆணைக்குழு என்ற பூதம் கிளம்பிவிட்டது. இனி என்ன நடக்கும் என்பது தான் தெரிந்த விடயம் ஆயிற்றே. இவை எல்லாம் தமிழ் மக்களுக்கு தரும் படிப்பினை ஒன்று உண்டு. யுத்தம் முடியும் என்ற மாயையில் இருந்து விலகி தமது விடிவிற்கான நீண்ட யுத்தம் ஒன்றினை அவர்கள் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கும்.

ooo

நல்லது நடந்தால் நாமும் சந்தோஷப்படலாம் தானே. அப்படி ஒரு நல்ல விடயம் நடந்திருக்கின்றது நமது மண்ணிலே. துரத்தப்பட்ட முஸ்லீம் மக்களை குறிப்பாக வியாபாரிகளை மீள வருமாறு யாழ் வர்த்தக சங்கம் அன்போடு அழைப்பு விடுத்திருக்கின்றது. சந்தோஷமான விடயம் தானே. முஸ்லீம்களின் இடங்கள் திரும்பவும் அவர்களிடமே கையளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஒரு பகுதி முஸ்லீம் சகோதரர்கள் தங்கள் இடங்களுக்கு சென்றிருக்கிறார்கள். இவை தமிழ்-முஸ்லீம் மக்களிடையே பரஸ்பர நேசத்தையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கும் விடயங்கள். இவற்றிற்கு சிகரம் வைத்தால் போல் அமைந்திருக்கின்றது ஒரு சம்பவம். மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசலை சிங்கம் என்பவர் இதுவரை காலமும் பராமரித்து வந்திருக்கிறார். அவர் தனது செயலால் உயர்ந்து நிற்கிறார். இவற்றைப் பார்க்கும் போது யாழ் பகுதி மக்கள் தங்கள் பிள்ளைகள் இழைத்த தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடுகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

மீண்டும் அடுத்த வெளியில் சந்திப்போம்

ஆ- குழு

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்

காயத்திரி கொன்ஸ்டன்ரைன்

மீண்டும் புழுகத் தொடங்கி விட்டார்கள். வழமை போல் இம்முறையும் சிங்களப் புழுகர்களுடன் தமிழ் கோமாளிக் கட்சிகளும் இணைந்து புழுகத் தொடங்கிவிட்டார்கள். கடந்த 40 வருடமாக பேசிப் பேசிப் புளித்துப்போன இந்தப் பாழாய்ப் போன அரசியல் பரவலாக்கள் புஸ்வாணத்தை இந்த முறையும் கொழுத்தி மகிழ விரும்புகின்றது. இன்றைய அரசாங்கம். புதிய தீர்வு திட்ட த்தை இந்த மாதம் பாராளுமன்றத்தில் அறிமுகமாக்கி அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று பின்னர் அதை மக்களிடம் எடுத்துச் சென்று... சர்வசன வாக்கெடுப்பு நடாத்தி... பிரச்சினகளை தீர்த்து வைக்கப் போகிறார்களாம். நிறைவேறப் போகும் காரியமா இது? ஜனநாயக அடிப்படையில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமையப்போகும் புதிய தீர்வுத்திட்டம் என்று வர்ணிக்கின்றார் ஜனாதிபதி சந்திரிக்கா. கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளும் இதில் ஏதோ விடயம் இருப்பதைப்போல் தலைதெறிக்க ஓடித்திரிகிறார்கள். எமது பிரச்சனைகளுக்கெல்லாம் அடித்தளமாக விளங்கும் ஒருவனிடமே அதற்கான விடிவைக் கேட்டது எவ்வளவு குருட்டுத் தனம்?

1948ம் ஆண்டிலிருந்து நாட்டை ஆண்டு நாசமாக்கிய பண்டாரநாயக்காக்களும், ரத்வத்தைகளும், பீரிசுகளும், குணவர்த்தனாக்களும்தான் பிரச்சனைகளுக்கு தீர்வை கொண்டுவருவார்கள் என எதிர்பார்ப்பது வடிகட்டிய முட்டாள் தனம். இனவாதத்தையும் மத துவேசத்தையும் அரசியலாக்கி தமது அரசியல் தேவைகளுக்காக தமிழ்க் கட்சிகளை அவ்வப்போது பாவித்துவந்த அதே தந்திரம் தான் இன்னும் அரங்கேறுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழீழ விடுதலை போராட்டத்தையும் முற்றாக அழித்தொழிக்கவும் சர்வதேச மட்டத்தில் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவும் காலத்தை கடத்தும் முயற்சியே இந்த தீர்வுப்பொதி.

நாளுக்கு நாள் நடைபெறும் சாதாரண அரசியல் நிர்வாகத்தில், எதுவித மாற்றத்தையும் கொண்டு வராமல், தமிழ் பேசும் மக்கள் நாளுக்கு நாள் சந்திக்கும் நாளாந்த பிரச்சனை களை தீர்க்காமல், தமிழ் பேசும் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பற்றி சிந்திக்காமல், ஏதோ இரவோடு இரவாக அறிமுகப்படுத்தப்பட இருக்கும் பொதியில் தான், எல்லாத் தீர்வும் அடங்கி இருக்கும் எனக் கூறுவது மடமையிலும் மடமை.

சில மாதங்களிற்கு முன் வன்னிப் பிரதேசத்தினுள் பறையனாவைக்குளம் என்ற பிரதேசத்திற்கு சப்புமல்புர என்ற சிங்கள பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப்பிரதேசத்திலிருந்து உத்தியோகபூர்வ பெயர்ப் பலகையும் மாற்றப்பட்டு ரத்வத்தையின் உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்பட்டது. இது பற்றி தற்போது லண்டன் விஜயம் செய்துள்ள ஆளும் பொதுசன முன்னணியின் உறுப்பினரான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திரு வாசுதேவ நாணயக்காராவை கேட்ட போது ஜனாதிபதியால் தனது இராணுவத்தை தனது முழுக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியவில்லை என ஒப்புக் கொள்கிறார். ஜனாதிபதியின் அனுசரணையின்றி இவ்வாறான பெயர் மாற்றங்களும், சிங்கள குடியேற்றங்களும் தொடர்ந்து இடம் பெறுகின்றன என்கிறார் திரு நாணயக்கார. யதார்த்தமான நிலமை இதுதான். தான் விரும்பியபடி தான்தோன்றித் தனமாக இயங்கும் ஸ்ரீலங்கா இராணுவம் இரவோடு இரவாக மனம் திருந்தி அரசாங்கம் அறிமுகப்படுத்தும் இந்தப் புதிய அரசியல் யாப்பை அமுல்படுத்த பக்கபலமாக இருக்கும் என எப்படி எதிர் பார்ப்பது?

யதார்த்த நிலையை வெளிப்படையாக ஆராய்வோமாகில் கொழும்பை மையமாக வைத்து இயங்கும் எந்தவொரு சிங்கள அரசியல் கட்சியும் பௌத்த பிக்குகளின் தலைமைப் பீடத்தையும் ஸ்ரீலங்கா இராணுவப் படையினரின் எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை தரப்போவதில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு சார்பாக கொண்டுவரப்படும் எந்தவொரு சிறிய அரசியல் அமைப்பு திருத்தத்தையும் இவ்விரு பிரிவினரும் என்றும் ஏற்றுக்கொள்ளப் போவ தில்லை. யதார்த்த நிலமை இப்படி இருக்க ஜனநாயக கோட்பாட்டிற்கு அமைய தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகள் கிடைப்பது முற்றிலும் பொய்ப்பேச்சு.

இன்றைய நிலையில் கொழும்பிலிருந்து சமாதானத் தீர்வொன்று உருவாவதானால் அதற்கு இரண்டு வழிதான் இருக்கின்றது. முதலாவது ஸ்ரீலங்காவின் ஆட்சிப்பீடத்தை இராணுவம் கைப்பற்றி அதன் மூலம் இராணுவ ஆட்சியை அறிமுகப்படுத்தி புதியதொரு உடன்படிக்கையை செயற்படுத்துவது அல்லது வெளிநாடொன்று அரசியல் ரீதியாக அல்லது நேரடி இராணுவ ரீதியாகவோ தலையிட்டு பிரச்சனைகளை தீர்த்துவைப்பது. மேற்படி இரண்டு தீர்வுகளிலும் சாத்தியமில்லாத நேரத்தில் இப்பிரச்சனைக்கான தீர்வு தமிழ் பேசும் மக்களான எம்மிலேயே தங்கியுள்ளது. அதாவது எமது போராட்டத்தை எமது தேசத்தின் விடுதலையை முற்றுமுழுதாக நாமே போராடி வென்றெடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

ஆயுதம் ஏந்திப் போராடுவது மட்டும்தான் விடுதலைப் போராட்டமாக அமைந்துவிடாது. அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொள்வது மட்டும் தான் போராட்டத்திற்கான வழியாக இருந்துவிட முடியாது. மாறாக ஸ்ரீலங்கா ஆட்சிக்கும் அரசியல் வாதிகளுக்கும் அரசிற்கும் எதிராக மேற் கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைக்கான பாதையாக அமையும். வெளிநாடுகளில் வாழும் தமிழர் தம்மால் இயன்றவரை ஸ்ரீலங்கா அரசிற்கு எதிரான பிரச்சாரத்தில் தமக்கு முடியுமான பங்களிப்பை அளிக்க முன்வரவேண்டும். எந்த அமைப்பு, எந்த ஸ்தாபனம் அந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது என்பது இரண்டாவது விடயம். கொடுக்கப்படும் எதிர்ப்பு ஸ்ரீலங்கா அரசிற்கு எதிராக இருக்கும் வரை நாம் எந்த அமைப்புடனும் இணைந்து செயல்பட வேண்டும்.

தமிழ் இனம் என்ற ரீதியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் வெளிநாடுகளில் வெளியாகும் பத்திரிகைகளும், ஸ்தாபனங்களும் தமது பங்களிப்பை செலுத்த வேண்டும். எமது இன அடையாளத்தை ஸ்திரப்படுத்துவது இதை துவேஷமாக யாரும் கருதிவிட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com




# MARKANDAN & CO

## SOLICITORS

Empowered to Administer Oaths

Tamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT

ALL ASPECTS OF IMMIGRATION MATTERS TO APPEALS
TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS

ALL TYPES OF CONVEYANCING
LITIGATION
ALL COURTS CIVIL/CRIMINAL
LANDLORDS/TENANT MATTERS
MATRIMONIAL
POLICE STATION ADVICE
ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

LEGAL AID

WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP

M.MARKANDAN
TEL: 0181 514 8188
FAX: 0181 514 8303



www.padippakam.com



# புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களும் தாய்மொழிக் கல்வியும்

லோகதாஸ்

"பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல கால
வகையினாலே"....

என்பது பவணந்தியார் ாடல்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திர கள் தமிழ் மொழியில் பெயர்த் ல் வேண்டும்" இது பாரதியார் விதை.

எனது மகனுக்கு இப்போது 4 யது முடிந்துவிட்டது. பாலர் வகுப் ற்கு செல்கிறான். சுவிற்சலாந்தில் ாலர் வகுப்புக்களில் மாணவர் ளைச் சேர்ப்பதாக இருந்தால் ந்து வயது முடிய வேண்டும். ern மாநிலத்தில் இந்த வயதுக் ட்டுப்பாடு சென்ற ஆண்டு வரை வயதாக இருந்தது. ஆனால் னது மகன் rudolf steiner பாட ாலையில் உள்ள Kindergarten சேர்க்கப்பட்டுள்ளார். கல்வி கற் க்கும் முறையில் வித்தியாசமான ல முன்மாதிரிகளைக் கையாள்வ ில் இன்றும் இப்பாடசாலையே ன்னோடியாக இருந்து வருகிறது. து அரச பாடசாலைகளில் இரு து பல அம்சங்களில் வேறுபட் து. இப்பாடசாலையின் நோக்கம் ducation Towards Freedom என் ார்கள். இப்பாடசாலையில் கற் க்கும் வழிமுறைகள் சிலவற்றை அரச பாடசாலைகள் வருடா வருடம் வீகரித்து வருகின்றன. அதில்

> சுவிசில் நான் வாழும் நகரத்திலும் தமிழ்ப் பாடசாலைக்குக் குறைவில்லை ஒன்றுக்கு 3,4 ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்கிறார்கள். ஆனால் எனது மகனை தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்பி வைக்க அச்சப்படுகிறேன்.

க்கியமான அம்சம் ஏழு வயது ரை பிள்ளைகளுக்கு எழுத்தறிவிப் தில்லை என்ற நடை முறையும் ள்ளிகள் இடுவதன் மூல மன்றி திப்பீடுகளின் மூலம் பிள்ளைக ின் தரத்தைக் கணிப்பிடுகின்ற ம்சமும் அடங்கும்.

சுவிசில் நான் வாழும் நகரத்தி ும் தமிழ்ப் பாடசாலைக்குக் குறை ில்லை ஒன்றுக்கு 3,4 ஆசிரியர் ள் தமிழ் கற்பிக்கிறார்கள். ஆனால் னது மகனை தமிழ்ப் பாடசாலை கு அனுப்பி வைக்க அச்சப்படு ிறேன்.

மேற்படி பாடசாலைகளின் நடை முறைகள் பற்றி சுவிசில் இருக் ும் தமிழ்ச்சங்கங்கள் ஆசிரியர்கள் இடம் பல தடவை கதைத்துள் ளேன். சில விழாக்களிலும் இது ற்றிப் பேசியுள்ளேன். ஆனால் அரைத்த மாவை அரைக்கும் நடை முறை தான் தொடர்கிறது. ஆசிரி யர்கள் சிலர் மனதளவில் ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் லவகை நிர்ப்பந்தத்திற்கு உள்ளா கிறார்கள். குறிப்பாக இங்கு நடாத் தப்படும் பொதுப் பரீட்சை முறைகள் இந்நடைமுறைக்கு மிகவும் தடையாக அமைகிறது.

தமிழ் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்களிடம் தாய்மொழிக் கல்வியை ஆரம்பிக்கின்ற தமிழ் மாணவர்கள் அந்தந்த நாட்டுப் பாடசாலைகளுக்குச் சென்றதும் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாகிறார்கள். காரணம் அவர்கள் தமிழ் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்களிடம் சுவீகரித்துக் கொண்ட கல்வி நடைமுறைகள் தாம் செல்லும் பாடசாலைகளில் காணப்படுவதில்லை. அதனால் அந்தந்த நாட்டுக் கல்வி நடைமுறைகளுக்கு ஏற்ப தமிழ் பாடசாலைகளிலும் மாற்றங்களை உண்டுபண்ண வேண்டியது அவசியமாகும். ஐந்து வயதில் கற்க வரும் குழந்தைகளின் ஆரம்பக் கல்வி கதைசொல்லி ஆடிப்பாடி பொழுதுபோக்குவதாகவே அமைய வேண்டும். எழுத்து எழுதுவிப்பதை ஏழு வயதுக்கு முன் ஆரம்பிக்கவே கூடாது. ஏழுவயதுக்கு முன்பு எழுதிப் பழகும் பிள்ளைகளுக்கு கூடிய ளவு சக்தி தேவைப்படுவதனால் பிள்ளைகளின் தாமாகச் சிந்திக்கும் ஆற்றல் தடைப்படுகின்றது.

இந்நாட்டு நடைமுறைகளில் பிள்ளைகள் ஏழுவயதிற்குப் பின்பு தான் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் எழுத்தறிவிப்பும் அங்கு தான் ஆரம்பிக்கின்றது. பிள்ளைகள் சுமார் மூன்று மாதங்களில் எழுத்துக் கூட்டி வாசிக்கும் பயிற்சியைப் பெற்றுவிடுகிறார்கள். ஏழு எட்டு மாதங்களில் சிறிய சிறிய புத்தகங்களை பெற்றோரின் உதவி இன்றியே வாசிக்கும் பயிற்சியில் ஈடுபடுகின்றார்கள்.

இதற்கான காரணம் ஐரோப்பிய மொழியில் காணப்படும் இலகுவான தன்மை என்று எவ்வித ஆய்வுமின்றி அடித்துக் கூறிவிடுவர் எம்மவர். ஆனால் என்னைப் பொறுத்தவரை இது ஒரு பகுதிக் காரணம் மட்டும் தான். ஆனால் முழுமையான காரணம் மொழியைக் கற்பிப்பதில் பேணப்படும் வழிமுறையே. சிறார்களுக்கு மொழியை அறிமுகம் செய்வதில் மொழிக்குரிய எழுத்துக்களை பிஞ்சு உள்ளங்களில் பதிய வைப்பதில் மேற்கொள்ளப்படும் புதிய புதிய வழிமுறைகள்தான். எமது சிறார்களும் இம்மொழியைக் கற்றுக்கொள்வதற்கு இலகுவா கின்றது. அந்நிய நாடுகளில் தாய் மொழிக் கல்வி மிகவும் அவதானமாகக் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை இந்நாட்டு மொழி வல்லுனர்கள் அடிக்கடி கூறுவர். இந் நிலையில் தமிழ் மொழியை கற்பிக்க முனைப்படும் எமது ஆசிரியர்கள் இந்நாடுகளில் சிறார்களுக்கு மொழியைக் கற்பிப்பதில் பேணப்படும் இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகள் பற்றி குறைந்தளவேனும் அறிந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் கல்வி கற்கும் மொழியிலும் ஓரளவுக்கேனும் பரிச்சயம் இருத்தல் வேண்டும்.


ஆனா(அ) இம்மன்னா(ம்) மாவன்னா(மா) அம்மா என்பது தமிழில் காலம் காலமாக பேணப்பட்டுவரும் எழுத்தறிவிக்கும் வழிமுறையாகும். தாய் மண்ணிலும் தமிழ் நாட்டிலும் இம்முறைகள் ஓரளவுக்கு அருகிப் போனபோதும் இந்நாடுகளில் பல இடங்களில் இந்நடைமுறை தான் பேணப்பட்டு வருகின்றது. நாம் புலம் பெயர்ந்து வாழும் ஐரோப்பிய ஸ்கண்டிநேவிய நாடுகளில் முதல் வகுப்புக்குச் செல்லும் சிறார்களுக்கு எழுத்தின் வடிவங்களும் அதற்குரிய ஒலியன்களும் மட்டுமே அறிமுகம் செய்யப்படுகின்றது. இரண்டாம் வகுப்புவரை மாணவர்கள் இவ்வகையில் தான் எழுத்துக்களை அறிந்து கொள்கிறார்கள். அதிலும் முதலில் ஒலி அல்லது ஒலிமுதல் எழுத்துக்கள் எனப்படும் (தமிழில் அ, உ, ம் போன்ற) எழுத்துக்களும் பிள்ளைகளுக்கு ஏற்கனவே நன்கு பழக்கப்பட்ட ஒலியன்களுக்குரிய எழுத்துக்களுமே முதலில் அறிமுகம் செய்யப்படுகின்றது. அதாவது Mama என்பது ஜேர்மன் மொழியில் அம்மாவையும் Papa என்பது அப்பாவையும் குறிக்கும். Mama இற்குரிய எழுத்துக்களை அறிவிக்கும் போது ம், அ, ம், அ Mama என்றும், ப்,அ,ப்,அ Papa என்றும் எழுத்துக்களின் வடிவங்களையும் அதற்குரிய ஒலியன்களையும் மட்டும் அறிவிக்கிறார்கள். இதைத் தமிழில் அறிவிப்பதாக இருந்தால் அ,ம்,மா = அம்மா என்று வரும்.

இதில் அ என்பது எழுத்தின் வடிவமாகவும் அதை ஆனா என்பதற்கு பதிலாக அ என்று உச்சரிக்கும் போது அதற்குரிய ஒலியன் வெளிப்படுகின்றது. இவ்வாறு ஒலியன்களையும் ஒலியன்களுக்குரிய எழுத்தின் வடிவமும் தெரிவிக்கப்படுகின்றது. அரிச்சுவடியின் ஒழுங்கைப் பேண வேண்டிய அவசியமும் இல்லை.

இந்நாடுகளில் மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் உலகில் காணப்படும் ஏனைய மொழிகளின் வடிவங்கள் பற்றி சுருக்கமாகவேனும் அறிந்திருப்பது அவர்களுக்கான மேலதிக புள்ளி ஆகும். அதாவது உலகின் எழுத்துக்களை ஒலிசார் எழுத்து, பொருள்கள் எழுத்து என்று இருபெரும் பிரிவுக்குள் அடக்குவர். இந்தோ-ஐரோப்பிய எழுத்துக்கள் ஒலிசார் எழுத்து வகைக்குள் அடங்கும். இந்த வகையில் தமிழும் ஒலிசார் எழுத்து வகைக்குள் அடங்கும். ஆனால் சீன, ஜப்பானிய எழுத்துக்கள் பொருள்சார் எழுத்துவகையைச் சேர்ந்தவை. அதாவது எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அது வெளிப்படுத்தும் பொருளுடன் கூடி ஒரு சித்திரம் போல் அமைவதே அதன் விசேட தன்மை. அதாவது சொற்கள் எழுத்துக்களாகவும் அமைவது. இதனால் இவ் எழுத்துக்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டும். இந்த வகையில் இந்நாட்டு ஆசிரியர்கள் சில ஒலியன்களுக்குரிய எழுத்து வடிவங்களை சித்திரப்படுத்தி பொருள்கள் எழுத்துக்குரிய வடிவத்தைக் கொடுத்து பிள்ளைகளின் மனதில் இலகுவாக பதிய வைத்துவிடுகிறார்கள்.

வீடு என்பதை house என்று ஆங்கிலத்திலும் haus என்று ஜேர்மனிலும் எழுதுகின்றோம். இதில் வரும் முதல் எழுத்தாகிய H ஐ  என்று வீடு போல் சித்திரப்படுத்தி haus க்கு வரும் முதல் எழுத்து H என்றும் பிஞ்சு உள்ளங்களில் இலகுவாகப் பதியவைத்துவிடுகிறார்கள். இப்படி எழுத்துக்களைச் சித்திரப்படுத்தும் முறைகளை தமிழிலும் மேற்கொள்ள முடியும். உதாரணமாகச் சில,




இன்னும் பல எழுத்துக்களையும் இதே சித்திரப்படுத்தும் முறைக்கு உட்படுத்த முடியும்.

ஐரோப்பிய எழுத்துக்களுடன் ஒப்பிடும்போது எமது சிறார்களை மலைக்க வைக்கும் மற்றொன்று எழுத்துக்களின் எண்ணிக்கை. தமிழில் எழுத்துக்களின் எண்ணிக்கை எத்தனை என்று கேட்டால் உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, ஆயுத எழுத்து 1, உயிர்மெய் எழுத்துக்கள் 216 என்று கணக்கிட்டு மொத்தம் 247 என்ற கூறிவிடுகின்றோம். சற்று ஆழமாக இன்றைய மொழியியலாளரின் பார்வையின் துணை கொண்டு சிந்திப்போமானால் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 31 என்ற முடிவிற்கு இலகுவாக வந்துவிடலாம். இதிலும் ஐ,ஔ ஆகிய எழுத்துக்களின் ஒலியன்கள் முறையே அ-ய் =அய், அ-வ் =அவ் என்று கூட்டெழுத்துக்களின் மூலம் பிரதிபலிப்பதனால் இவ் இரு எழுத்துக்களையும் போலி எழுத்துக்களாகவே கருதப்படுவதாகவும் அவற்றின் மாத்திரையும் ஒன்றரையாக இருப்பதனாலும் இவை(ஐ, ஔ) நீங்கலாக ஏனைய தமிழ் உயிர்களை மட்டும் முறையே குற்றெழுத்து, நெட்டெழுத்து என்ற வகைக்குள் சேர்த்து விடுகிறார் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்.

அடுத்து உயிர்மெய் எழுத்துக்களையும் அவற்றை உருவாக்குவதில் கையாளப்படும் சூட்சுமம் பற்றியும் நோக்குவோம். கோட்பாட்டு ரீதியில் ஒலிசார் எழுத்துக்களை மூன்று வகைக்குள் அடக்குவர். அவை ஒலியெழுத்து, ஒலியன் எழுத்து, ஒலியசை எழுத்து.

தமிழில் உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் ஒலியன் எழுத்துவகைக்குள் அடங்க உயிர்மெய் எழுத்துக்கள் ஒலியசை வகைக்குள் அடங்குகின்றது. அதாவது உயிரும் மெய்யும் சேர்ந்து ஒரு அசைக்கு (க்-அ = க, க்-ஆ =கா) ஒரு எழுத்து என அமைவது. இவ் எழுத்துக்கள் உயிர் மெய் எழுத்துக்களில் இருந்து புறம்புபடுத்தி அமைக்கப் பட்டவையல்ல. இருந்தும் தமிழில் எத்தனை எழுத்துக்கள் என்று வினவினால் உயிர், மெய், ஆயதம் 31 உடன் உயிர்மெய் எழுத்துக்கள் 216 ஐயும் கூட்டிவிடுகிறோம். இது ஐரோப்பா வாழ் எமது சிறார்களை தாய் மொழி கற்கும் நாட்டத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் எமது ஆசிரியர்களின் கடமை உயிர்மெய் எழுத்துக்கள் உருவாக்கப்படுவதில் காணப்படும் சூட்சுமத்தை விளங்கவைத்து எமது மொழி எழுத்துக்களை இலகுபடுத்துவதே.

இது பற்றி அடுத்த இதழில் நோக்குவோம்.

இலங்கையில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான மளிகைப் பொருட்களையும், ஓடியோ கசட்டுகள், சீடிக்கள், தமிழ் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றையும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் திரைப்பட வீடியோ கசற்றுகளின் தரமான பிரதிகளை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

SIVRAJ ENTERPRISES

114 TOOTING HIGH STREET, LONDON SW17 0RR
Tel: 0181 682 1677/ 0850 846 238, Fax: 0181 767 0167

www.padippakam.com



# சுழல் காற்றில் அணைந்து போன மெழுகுவர்த்தி

'டயானா Image ஐப் பயன்படுத்திப் பணம் சம்பாதித்தவர்கள் இன்று கைகளில் இரத்தக் கறையுடன் நிற்கின்றனர்'

மேற்குறிப்பிட்ட வாசகம் டயானாவின் சகோதரன் அவரது மரணத்தையொட்டி நிகழ்த்திய உரையின் போது தெரிவிக்கப்பட்டது.

டயானாவின் இறுதி மரியாதையில் கூடிய சனத்திரளிற்குக் காரணமென்னவென்று பார்க்கும் போது பிரிட்டிஷ் தகவல் துறையின் (media) பங்களிப்பே பெரும்பங்கு வகிக்கின்றது. டயானா மக்களின் இதயராணியாகச் சித்தரிக்கப்பட்டார். அவரது image மீண்டும் ஒரு முறை உக்கிரவேகத்தில் எழுந்து அடங்கியது. ஆனால் இதே media அன்னை தெரேசாவின் மரணத்தைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு காலத்தில் டயானா இமேஜ் ஒரு Super Model ஆகக் காண்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் அரச குடும்பத்துடன் டயானா முரண்பட ஆரம்பித்ததுமே மஞ்சள் பத்திரிகைகளான Sun, Mirror போன்றவை இவர்மேல் கரி பூசத் தொடங்கின. டயானா சென்ற இடமெல்லாம் ஒட்டுப்பார்க்கப்பட்டது. கிசுகிசு செய்திகள் அடிக்கடி பரப்பப் பட்டன. டயானாவின் தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்கப்பட்டது. அவருடன் தொடர்பு வைத்திருந்ததாகப் பிரபல முகங்கள் காண்பிக்கப்பட்டன.

இந்த நிலையில் இவற்றையெல்லாம் தாண்டி டயானா சமூகசேவகியாக வலம் வரத தொடங்கினார். இவரால் பல சமூக சேவை செய்யும் நிறுவனங்கள் பயனடைந்தன. பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் இவருக்கு செல்வாக்கு வளர்ந்தது. மிதி வெடிகளுக்கு எதிரான இவரது பிரச்சாரம் உலகளாவிய ரீதியில் அவருக்குப் பாராட்டைத் தேடித் தந்தது.

மறுபுறம் அரச குடும்பத்தைச் சேர்ந்த டயானா அரசகௌரவத்தை விட்டுக் கொடுக்கும் போக்கில் நடந்து கொண்டிருந்தமை ராணிக்குப் பெருந்தலைவலியாக அமைந்தது. gloves உடன் மட்டுமே மக்களிடம் கைகுலுக்கி வந்த ராணியம்மையாருக்கு டயானாவின் எளிமை இன்னுமொரு சவாலாக அமைந்தது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக டயானாவின் டொடி அல்பையட் என்ற முஸ்லீம் உடனான தொடர்பு அரச குடும்ப கௌரவத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது. சுதந்திரமான பெண் என்ற முறையில் அவருக்குத் தனது துணையைத் தேடிக் கொள்ளும் உரிமை இருக்கிறதாயினும் பழமைவாதிகள் அதனை சீர்குலைவு என்றே பார்க்க விழைந்தனர்.

டயானாவின் ஒவ்வொருபடி வளர்ச்சியும் ராணியைக் குழப்பிக் கொண்டிருக்க அவரது ஒவ்வொரு அசைவும் மஞ்சள் பத்திரிகைகளின் பணத்தாசைக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தன. இந்த நேரத்தில் தான் அவரது மரணச்செய்தி அறிவிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரம் என்ற பெயரில் டயானா விரட்டப்பட்டு மரணம் வரை கொண்டு சென்றுவிடப்பட்டார். டயானா இமேஜ் இல் பணம் சம்பாதித்தவர்கள் அவரது மரணத்தையிட்டு நீலிக்கண்ணீர் வடித்தனர். sun தனது பிரதிகளை கறுப்பு மையில் வெளியிட்டு சோகத்தைக் கொட்டியது. டயானாவின் படங்கள் பத்திரிகையின் பக்கங்களை நிறைத்தன. அவர் உயிர் வாழ்ந்தபோது சம்பாதித்தவர்கள் அவரது மரணத்தின் பின்னும் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

சரியான விமர்சனக் கண்ணோட்டம் இல்லாது டயானா பற்றிய முடிவுக்கு வருவது கடினமே. ஆனாலும் அவரது மரணம் கொடுமையானது. அதுவே இன்னும் பல மக்களின் மனங்களை அவர் கொள்ளை கொள்ளக் காரணமாய் அமைந்தது.

## பெண்ணே டயானா

குகைதனில் போகையில்
குளிர்ந்ததோ உடலம்!
பழமைவாதியும் பத்திரிகையாளரும்
கூட்டாய்ச் சேர்ந்து
கொன்றனர் உன்னை

நேசித்த மக்களில்
நானும் ஒருவன்
இளவரசியானதற்கல்ல
இதயம் கொண்டாய் என்பதற்காக

காலனித்துவக் கொள்ளையரை
கரம் காட்டி எதிர்த்தாய்
பெண்ணின் உரிமைக்காய்
முடிதுறந்த மன்னர்கள்
விழிபிதுங்கி நிற்க
மானுடம் காக்க
மனிதரை நேசிக்க
எதையும் செய்வேன் என்றாய்
காரணம் விடுத்து
காரியம் பார்ப்போம்

எய்ட்ஸ் கொண்ட மனிதருக்கு
புற்றுநோய் எதிர்ப்புக்கு
அங்கோலா நாட்டில்
கண்ணிவெடி எதிர்ப்புக்கு
கறுப்பினக் குழந்தையின்
சிரிப்புக்கு
யூகோ நாட்டில்
யுத்தபூமி மக்களுக்கு
ஐரோப்பாவில் அங்கவீனர்கட்கு
இந்திய நாட்டில் ஏழைகட்கு
இவ்வாறாக இன்னமும்......
இனமதம் கடந்து
இயன்றதைச் செய்யக்
கருணை கொண்ட
வெள்ளைப் பெண்ணே!
வெண்ணிறப் பூவை
கண்ணீர் நனைத்துன்
காலடி வைப்பேன்

# 'நாளைக்கு இன்னொருத்தன்'

## -நூல் வெளியீடு-

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் பெண்களின் நலனில் அக்கறை கொண்டவர். தனது எழுத்துக்களில் பெண்களின் அவலங்களை வெளிக்கொணர்வதில் பல வழிகளிலும் முயன்று வருகிறார். இவரது எழுத்துக்கள் சமூகத்தில் பொதுவாகக் கதைக்கக் கூச்சப்படும் விடயங்களைக் கூட உள்ளடக்கும் பண்புடையவை.

21.8.97இல் லண்டனில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவின் வழமையான சம்பிரதாயங்கள் முடிவடைய, பெண்கள் சம்பந்தமான விடயங்கள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டன. புலம் பெயர் வாழ் சூழ்நிலையில் எப்படிப் பிள்ளைகளை வளர்ப்பது என்ற விடயத்தில் இங்கு வாழும் முஸ்லீம் சமூகத்தை ஏன் முன்னுதாரணமாகக் கொள்ளக் கூடாது என்ற கேள்வி எழுந்தது.

பிரிட்டனில் முஸ்லீம் சமூகப் பெண்கள் குறிப்பாக வங்காளப் பெண்கள் மிகவும் பின்படுத்தப்பட்ட நிலையில் உள்ளனர். இவர்களது கல்வியறிவு மிகவும் தாழ்ந்த நிலையிலும் ஆண்களிடம் தங்கி இருக்க வேண்டிய தேவையை அதிகப்படுத்தியதாயுமே உள்ளது. அதுமட்டுமல்லாது பாடசாலைகளில் பாலியல் சம்பந்தமான கற்பித்தலின் போது கூட தமது பிள்ளைகளை விலகத்தி வைக்குமாறு முஸ்லீம் பெற்றோர் கேட்டுக் கொள்கின்றனர். இந்த அறியாமை பின்னர் பிள்ளைகளை பெரிய தவறுகளை இழைக்க வழி செய்கிறது. தமிழ் பிள்ளைகள்(பெண்கள்) இந்த விடயத்தில் ஒப்பீட்டளவில் அறிவுபூர்வமாகவே உள்ளனர். எனவே எமது பிள்ளைகளை இங்கு வாழும் முஸ்லீம் சமூகத்தவருடைய வாழ்நிலைக்குத் தள்ள முடியாதென ராஜேஸ்வரி பொறுப்பாக பதிலளித்தார்.

BBC சுவாமிநாதன் மதங்கள் பெண் விடுதலையை ஆதரிக்கின்றன என்ற தன் வாதத்திற் கான ஆதாரங்களை வேதங்களிலிருந்த எப்படியோ தேடிக் கொடுத்தார் ஆனாலும் அங்கிருந்த பெண்கள் அதைப் பெரிதாக ஆட்சேபிக்காதது ஆச்சரியத்துக்குரியதே.

குடும்பம் பெண்களின் சிறைக்கூடமாக வர்ணிக்கப்படுகிறதே என்ற வினவலின் போது குடும்பம் ஒரு கோயில் என்றும் இல்லற வாழ்க்கையை அறியாதவர்களே மேற்படி கூறி வருகின்றனர் என்றும் ராஜேஸ்வரி தனது கருத்தைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சி, பெருமளவு மக்கள் கலந்துகொள்ளா விட்டாலும் ஓரளவு கனமாகவே அமைந்திருந்தது. பெண் விடுதலையின் தேவையும் அது ஆண் எதிர்ப்பாக இருக்கக் கூடாதென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. தனிப்பட்ட தனது வாழ்க்கையை விடுத்து பொதுவான விமர்சனங்களுக்கு ஊடாகவே தான் எழுத விழைவதாக ராஜேஸ்வரி கூறினார். தனது கருத்துக்களில் அவர் எவ்வளவு உறுதியாக இருந்து செயற்பட்டு வெற்றி காண்பார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# நிர்வாண இரவுகள்

பாதுகாப்பற்ற இரவுகள்
பெண்களுக்கு
பாதுகாப்பளிக்காத இரவுகள்
இப்படி இருக்கையில்
வானத்தை கிழித்து
வெளிவரும்
இந்த விடியல்
வெளிச்சமான பகல்பொழுது
பொய்யானது
தேவையற்றது
நம்பிக்கையளிக்காதது

எம் இருப்பிற்கு
உரிமை உண்டென்றால்
இருண்ட வானம்
மட்டுப்படுத்த நினைக்கும்
சுதந்திரம்

விலைமதிக்க முடியாதது
எம் வாழ்விற்கு
ஓராயிரம் அர்த்தங்கள்
உண்டென்றால்
வெறும் நோட்டுக்களுக்காய்
எரிக்கப்படுவதன்
தேவை என்ன?

கத்தி முனை போன்ற
சிறகுகளை கழுகுகள்
விரித்து
கோழிக்குஞ்சாய் காவிச்சென்று
செட்டைகளை உரித்து
எங்களை எப்படி
சிறுமைப்படுத்தலாம்
எங்கள் வாழ்வில்
சூரியன் பொய்
விடியல் பொய்
விடியலை துரத்திவரும்
இரவின் கொடூரமே நிஜம்

எம் இரவுகள்
இப்படி இருக்கையில்
வசந்தங்களை
எங்களால் எப்படி பாட முடியும்
அவை எங்களுக்கு தேவையற்றதே

பெண்கள் இரவு நேரங்களில் சுதந்திரமாய் நடமாட முடியாது. அவர்கள் மனிதர்கள் ஆனபொழுதும் மிருகங்களை போன்று வேட்டையாடப்படுவர். இவ்வாறு அடிப்படை நடமாடும் சுதந்திரமே இல்லாத இவ் இனம் தன் இருப்பின் பெருமையை எவ்வாறு பாட முடியும். சமூகத்தின் பார்வையில் சதை ரீதியில் கணிக்கப்படுவர்.

**பாமதி** (கனடா)

படிப்பகம்

www.padippakam.com



# பொறுக்கியவை

## தினமுரசு

ஸ்ரீலங்காவிலிருந்து மூவண்ணத்தில் கவர்ச்சியாக வரும் வாரமலர். முகப்பில் நடிகையர்கள் படம். நடுப்பக்கத்தில் எந்த நடிகை எந்த நடிகருடன் படுத்தெழும்பினார் என்ற விபரங்கள். வாரபலன். தமிழக நட்சத்திர எழுத்தாளர்களின் தொடர்கதைகளின் மறுபிரசுரம். இவற்றோடு சேர்ந்து இயக்க வரலாறு, களச் செய்திகள், கிசுகிசு, சிந்தியா கேள்வி பதில் என்று பலப்பல.

மொத்தத்தில் நீங்கள் விரும்பும் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய சுப்பர் மாக்கற் தினமுரசு.

பேரினவாத ஸ்ரீலங்கா அரசின் படைகளுடன் படைகளாக தமிழ் மக்கள் அழித்தொழிப்பை மேற்கொண்டு வரும் கூலிப்படை யான ஈ.பி.டி.பி யின் பத்திரிகை தான் தினமுரசு என்பது பலரும் அறிந்த ரகசியம்.

ஆனால் பலருக்கும் அதிசயம் என்னவெனில் செயலில் புலிகளை அழிப்பதில் சிங்கள இராணுவத்திற்கு துணை நிற்கும் ஈ.பி.டி.பி எழுத்தில் புலிகளின் அருமை பெருமைகளை வான் புகழ ஏன் எழுதுகின்றது.

இதில் அதிசயம் இல்லை. எல்லாம் காசு தான். தமிழகத்து பெரிய வார சஞ்சிகைகள் போல் தினமுரசும் பணத்தை கொட்டுவது இலங்கை பத்திரிகை வரலாற்றில் புதிசு தான். இன்று ஸ்ரீலங்காவின் பெரும் பணக்காரர்களில் ரமேஷ் என்று அழைக்கப்படும் சிவதாசனும் ஒருவர். இவர்தான் ஆசிரியரும், நாரதரும், அற்புதனும், இன்ன பலவுமாவார். இவருக்கு பணம் புரட்டும் வழிகள் தெரியும்.

ஆரம்பத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் பிறகு டக்ளசுடன் சேர்ந்து ஈ.பி.டி.பி ஐ.தே.க ஆட்சியில் ரமேஷ் சூரிய தீபன் என்ற பெயரில் ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரனில் 'புல்லட் பொக்ஸ்' பகுதியில் புலிகளை கிண்டலடித்தவர். பிரேமதாஸாவின் ஆதரவுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அலைவரிசையில் ஒலிபரப்பான 'மக்கள் குரல்' நிகழ்ச்சியை நடாத்தியவர். இதிலும் போராளிகள் கொச்சைப்படுத்தப்பட்டனர். இப்போது தினமுரசு முற்றிலும் புதிய பாணியில்.

லண்டன் கடைகளுக்கு தினமுரசு வந்த சில தினங்களிலேயே விற்றுத் தீர்ந்து விடுகின்றது. சுவிசிலும் பிரான்சிலும் அந்தந்த நாட்டுப் புலிப் பொறுப்பாளர்களால் தினமுரசு தடைசெய்யப்பட்டிருந்தாலும் படிக்க விரும்புவர் கைகளுக்கு அது தங்கு தடை இல்லாமல் போய் சேருகிறது. ஆர்வமாகப் படிப்பவர்களில் பெரும்பாலானோர் புலி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த வியாபாரிக்கு வாடிக்கையாளரின் பலவீனம், விருப்பம் தெரிய வேண்டும். சந்தையில் நல்ல டிமாண்ட் உள்ள பொருள் தெரிய வேண்டும். அனைவரையும் கவரக்கூடிய தந்திரங்கள் தெரிய வேண்டும். ரமேஷிற்கு எல்லாம் தெரிந்திருக்கின்றது. தினமுரசின் ஒரு தொடர் அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை என்பது. இதைத் தொடர்ந்து படிக்கும் முன்னாள் போராளிகளுக்குத் தெரியும் எவ்வளவு வீதம் கலப்படம் என்று.

அற்புதன் சொல்லாத சேதியொன்றை முன்னாள் ஜிகாத் அமைப்பாளர் அலியார் சரிநிகரில் தான் எழுதும் 'வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்....' என்ற தொடரில் சொல்கிறார். அதில் ஒரு பகுதியின் சுருக்கம் கீழே.

"...1983 கடைசிப் பகுதி. தோழர் பத்மநாபா தொலை பேசியில் சென்னையிலிருந்து பேசினார். இந்தியாவில் பயிற்சி எடுப்பதற்கான சகல வேலைகளும் பூர்த்தியாகிவிட்டன. உடனடியாக 200 இளைஞர்களை அனுப்பிவைக்கவும்" நான் உடனேயே தோழர்களைச் சந்தித்து உடன் யாழ் போகுமாறு சொன்னேன். கையில் பஸ் செலவுக்குக் கூட பணமில்லாது எவ்வாறு யாழ் போவது என அனைவரும் கைவிரித்தனர். நானும் இன்னும் இருவருமாகச் சேர்ந்து சிகரெட் வானொன்றை மறித்து ரூபா 9700 கொள்ளையிட்டோம். பணத்தை தோழர்களுக்கு கொடுத்து யாழ் அனுப்பினோம். அப்பணமும் போதாமல் போவிட்டது. தந்தையாரின் கடையில் ரூபா 6000 திருடினேன். நான் யாழ் வந்து தோழர்கள் பலரையும் சந்தித்து இந்தியா போகவேண்டும் என்றேன். அனைவரும் என்னை மூன்றாம் நபரைப் பார்ப்பது போல பார்த்தார்கள். தோழர் ரமேஷை சந்திக்குமாறு கூறினர். அவரை யாழ் கல்வியங்காட்டில் சந்தித்தேன். "உம்மை யார் மட்டக்களப்பில் இருந்து இங்கு இளைஞர்களை அனுப்பச் சொன்னது? யாழ் இளைஞர்களைத்தான் முதலில் பயிற்சிக்கு அனுப்ப வேண்டும் என்ற விடயம் உமக்குத் தெரியாதா?" என்று சேட் கொலரைப் பிடிக்காத குறையாக அவர் என்னை முறைத்தார். மூன்று நேரம் எந்தக் குறையுமில்லாது சாப்பாடு, நல்ல கல்விவளம், அன்பான சகோதர சகோதரிகள், உம்மா, வாப்பா அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு எம்முடன் நகமும் சதையுமாக வாழும் கிழக்கு தமிழருக்காகப் போராடப்போய் யாழ் மண்ணின் மைந்தர்களிடம் பேச்சு வாங்கி... மூன்றாய் மடிந்து கல்வியங்காட்டுச் சந்தியில் நின்றேன்"

சூடு-சுரணை-சுவை-சுவாரசியம் அதுதான் தினமுரசு.

## தாமக்கொச்சி 2

சென்ற முறை தாமக்கொச்சியைப் பற்றி எழுதிய பின் நிகழ்ந்த இரண்டு சம்பவங்களைப் பற்றி குறிப்பிட்டாக வேண்டும்.

முதலாவது பிரித்தானியா பாவனையாளர் சங்கத்தின் எச்சரிக்கை! மூன்று விசைகளை (Button) அழுத்துவதன் மூலம் தாமக்கொச்சியை வாழ வைக்கும் சிறார்கள் மத்தியில் குழந்தை வளர்ப்பு என்பது மிகவும் சுலபமான ஒன்றாகக் கருதப்படுகின்றதாம். அன்பு, பாசம், உறவு எல்லாம் வெறும் சடத்துவமாக இயந்திரத்தனமானதாக பார்க்கப்படுகின்றதாம். இது சிறுவர்களின் உணர்வில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடுமென்பதால் தாமக்கொச்சியை தடை செய்ய வேண்டும் என்று பாவனையாளர் சங்கம் கோரியுள்ளது.

வியாபாரச் சந்தையில் இப்படியான கோரிக்கைகள் எல்லாம் எடுபடுமா என்ன? 'பண்டாய்' நிறுவனம் மாதம் ஒரு புதிய கொச்சியை உருவாக்குவதாக அறிவித்து தொழிலிலும் இறங்கிவிட்டது. தாமக்கொச்சி பணம் காய்ச்சி ஆச்சே. அடுத்த அங்கலோ கொச்சியும் சந்தைக்கு வந்துவிட்டது. கணணிப் பிரியர்களுக்காக முப்பரிமாணத் தோற்றத்தில் கொம்புக்கொச்சி வந்துவிட்டது.

இரண்டாவது ஈஸ்ற்ஹாம் சுரங்க புகையிரத நிலையத்தருகில் நிகழ்ந்தது.

தெருவைக் கடக்கும் போது பொறுக்கி என்ற அன்பு அழைப்புக் கேட்டது. திரும்பிப் பார்த்தால் தெரிந்த முகம் தான். " 'வெளி'யில் நீ எழுதினாப் பிறகுதான் தாமக்கொச்சியைப் பற்றித் தெரிந்தது. நானும் வாங்கி மற்றவையையும் வாங்கச் சொல்லியிருக்கிறன். கடையளிலை தட்டுப்பாடாய் இருக்கிறபடியால் வாங்கி பிஸ்னஸ் செய்யலாம் போல கிடக்கு"

அடப் பாவிகளா!

## இதெப்படி இருக்கு...?

டென்மார்க் ஒரு அழகான நாடு. சனனாயக நாடென்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இங்கு டெனிஸ்காரர்களுடன் - பல வெளிநாட்டவரும் வசித்து வருகிறார்கள்.

ஈழத்தமிழர் ஒருவர் விவகாரத்தின் விளைவுகளில் மந்திரி ஒருவர் தனது பதவியை ராஜினாமா செய்ததும் இங்கு தான்.

ஆனால் இந்த சனனாயகத்தின் வரைமுறைகள் பொறுக்கிக்கு அவ்வளவாகப் பிடிபடுகுதில்லை.

இனவாத நிறவாத நாஸிக் கும்பல்கள் இந்த நாட்டில் தாராளமான சலுகைகளை அனுபவிப்பதும் சனநாயகம் தான். வெளிநாட்டவர்களுக்கும் அகதிகளுக்கும் எதிரான துவேச வானொலி ஒலிபரப்புக்களை நடாத்த நாஸிகளுக்கு நீதி மன்றங்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிட்லரின் உதவியாளரான றூடொல்வ் ஹெஸ் இறந்த திகதியைக் கொண்டாடுவதற்கு ஜேர்மனி தடைவிதித்துள்ளது. இத்தினத்தில் கூட முயன்ற ஜேர்மனிய நாஸிகள் பொலிசாரால் கலைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் டென்மார்க் இவர்களை வருக வருக என்று வரவேற்றது. டென்மார்க் நாஸிகள் தமது சகோதர நாஸிகளுடன் இணைந்து ஊர்வலங்கள் கூட்டங்கள் நடத்தினர். இடதுசாரிகளினால் இவர்கள் தாக்கப்படாமல் பொலிசார் பாதுகாப்பும் வழங்கினர். தமது அரசு தமக்கு இத்தகைய உதவிகளைச் செய்யும்போது அதற்கு பிரதி உபகாரமாய் நாஸிகள் விட்டுவிடுவதா?

தமக்குள் கூடி முடிவெடுத்து அவர்கள் பின்வருமாறு அறிவித்துள்ளார்கள்.

"...கறுப்பர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் போலி அகதிகள் எமது நாட்டுக்குள் வருவதைத் தடுக்க வேண்டும். இதற்கு முதற்கட்டமாக டென்மார்க்-ஜேர்மனிய எல்லைகளில் எமது தொண்டர்கள் சம்பளம் எதுவுமின்றி காவல் புரிய முன் வந்துள்ளனர்........"

இதெப்படி இருக்கு.........?

## தமிழ் இனவாதம்

நமக்கு ஏற்பட்டுள்ள அவலமான நிலைமை நம்மில் யார்தான் விரும்புகிறார்கள்? ஒவ்வொருவரும் அதிருப்தியோடு தான் இருக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். தாயக மண்ணுக்கு மீள வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகின்றனர்.

ஆனால் நாளைய தாயக மண்ணில் உரிமைகளோடு வாழ்வதற்காக இன்று சிரமத்தை மேற்கொள்ள நாம் எவரும் தயாரில்லையே.

நமக்கு முற்றிலும் தொடர்பேயில்லாத ஏதாவதொரு சக்தி தான் நமது பறிக்கப்பட்ட உரிமைகளை பெற்றுத்தர வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம்.

உண்மையில் எமது தாயக மண்ணில் நாம் உரிமையோடு வாழ வேண்டுமென்றால் அதற்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் நம்மிலிருந்துதான் துவங்க வேண்டும். அதற்காகப் போராடும் கடமை நம்முடையதே! என்ன நாம் எல்லோரும் அதற்குத் தயார்தானா?"

என்ன புலம் பெயர்ந்த மக்களிடையே இருந்து இன்னுமொரு துண்டுப் பிரசுரமா என்று தலையைச் சொறிய வேண்டாம். மேலே உள்ளது தமிழ் இனவாதத்தால் தமது தாயகத்திலிருந்து துரத்தப்பட்ட வடக்கு முஸ்லீம்களின் உரிமைக் குரல் வடக்கு முஸ்லீம்களின் உரிமைக்கான அமைப்பு வெளியிட்டுள்ள வடக்கு முஸ்லீம்கள் எதிர் பார்ப்பது என்ற பிரசுரத்தின் பின் அட்டையில் உள்ளது.

**- பொறுக்கி**


*For all legal services relating to*

**IMMIGRATION, ASYLUM APPLICATION, CIVIL LITIGATION, CRIMINAL LITIGATION & POLICE STATION WORK**

**RANJIT & CO**

Ranjit & Co Solicitors
176 Mitcham Road, London SW 17 9NJ
Tel: 0181- 767 9717


படிப்பகம்

www.padippakam.com



# 'போரின் மூலம் சமாதானம் சாத்தியமா?'

## (வன்னிப்போர் ஆய்வு)



கடந்த ஒருவருட காலமாகத் தயாரிப்புக்கள் செய்யப்பட்டதும் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டதுமான வன்னி நோக்கிய போர் கடந்த மே மாதம் 13ம் திகதி காலையிலே தொடங்கப்பட்டது. மூன்று முனைகளில் இருந்து முன்னேறுவது எனக் கூறப்பட்ட போதிலும் வவுனியா நொச்சிமோட்டையில் இருந்தும் வெலிஓயாவில் இருந்துமே படையணிகள் முன்னோக்கி நகர்த்தப்பட்டன. கடும் பீரங்கி, ஷெல் வான் வழித்தாக்குதல்களுக்கு மத்தியிலேயே இராணுவம் தமது நகர்வை மேற்கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'ஜயசுக்குறு' (வெற்றி நிச்சயம்) எனப் பெயரிடப்பட்டிருந்தது. புலிகள் இயக்கத்தின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்ட இராணுவம் வெசாக் தினத்திற்கு முன்பு பிரதான வீதி முனையில் ஓமந்தையையும், காட்டு வழி முனையில் நெடுங்கேணியையும் தமது வசமாக்கினார்கள்.

இன்று வன்னியின் மூன்று மாவட்டங்களான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் என்பனவற்றின் பெரும்பகுதி நிலப்பரப்பும் அதன் மக்கள் தொகையும் வடக்கில் இருந்தும், தெற்கில் இருந்தும் முற்றுகையிடப்பட்ட நிலையில்தான் இருக்கின்றது. இந்நிலையில் வன்னிக்கான பாதைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. எவ்வித போக்குவரத்தும் அனுமதிக்கப்படவில்லை. உணவு, மருந்து வகைகள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை. மக்கள் உணவு, மருந்து, இருப்பிட வசதிகள் அற்று காடுகளில் மரங்களின் கீழ் வாழ்ந்து வரும் அவல நிலை தொடர்கின்றது.

அரசாங்கம் முன்னெடுத்து நிற்கும் இவ்வன்னிப்போர் எதற்காக நடாத்தப்படுகின்றது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பொதுவாகவே ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துவரும் வடக்கு-கிழக்கு போர் சமாதானத்திற்கான போர் என்றே கூறப்படுகின்றது. 1995-1996 ஆண்டுகளில் வடக்கே குடாநாட்டிலும் அதற்கப்பால் கிளிநொச்சி வரையிலும் நடாத்தப்பட்ட போர்கள் யாவும் சமாதானத்திற்கான போர் என்றே கூறப்பட்டது. ஏற்கனவே இடம்பெற்ற போர்களினால் யாழ்குடாநாடு, கிளிநொச்சியின் ஒரு பகுதி, மன்னார் தீவு உட்பட வேறும் சில பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய பெயர் 'மீட்கப்பட்ட பிரதேசங்கள்' ஆகும். ஆனால் அவ்வாறு மீட்கப்பட்ட பிரதேசங்களின் நிலை எவ்வாறு இன்று உள்ளது என்பதே முக்கியமானதாகும்.

அங்கு சிவில் நிர்வாகமோ இயல்பு வாழ்க்கையோ ஏற்படவில்லை. அங்குள்ள ஒவ்வொன்றையும் இராணுவமே நிர்வகித்து கண்காணித்து பரிபாலனம் செய்து வருகின்றது. இவ் இராணுவ நடைமுறைகளுக்கும், சமாதானம் இயல்பு வாழ்க்கை என்பதற்கும் எவ்வித ஒட்டுமில்லை, உறவுமில்லை. துப்பாக்கி முனைகளின் கீழ் மக்கள் வாய்மூடி மௌனித்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். அரசின் சமாதானமும் இராணுவத்தின் மீட்பும் மேன்மேலும் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கவே வழிவகை செய்திருக்கின்றது. ஏற்கனவே இடம்பெற்ற போர்களின் முடிவும் இதுதான் என்றால் வன்னிப் போரினால் புதிதாக எதுவும் இடம்பெற்று விடப்போவதில்லை. ஒவ்வொரு பகுதியும் மீட்கப்படும் போது அப்பகுதி இராணுவ அடக்குமுறையின் கீழ் சென்றடைகின்றது என்பதே அர்த்தமாகும்.

> இராணுவத்தைப் பொறுத்தமட்டில் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகளின் பயிற்சி மட்டுமன்றி தற்போதைய காடுகளை ஊடறுத்து செல்லும் வியூக அமைப்பிலும் வழி காட்டப்படுகின்றனர். முழு இராணுவப்பலமும் தற்போதைய வன்னிப் போரில் பயன் படுத்தப்படுகின்றது. தமது ஆட்பலத்தை ஈடுசெய்வதற்காக கடற்படையினரையும் தரை யுத்தத்தில் பங்கு கொள்ள வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்புலத்தில் வைத்தே இடம்பெற்று வரும் வன்னிப்போரையும் நோக்குதல் வேண்டும். தொடுக்கப்பட்டுள்ள போர் தரைப்பாதைக்கானது என்று கூறப்பட்டது. புலிகளை அழித்தொழிப்பதற்கு என்றும் கூறப்படுகின்றது. எப்படியாயினும் தொடங்கியுள்ள வன்னிப்போர் மிகக் கடுமையானதாகவே இருக்கப் போகின்றது. ஒரு இராணுவ ஆய்வாளர் வன்னிப்போர் இறுதியானதாக அமையப் போகிறது என சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் உண்மை அவ்வாறில்லை. வன்னிப்போர் மிகக் கடுமையான போர்க்கட்டத்தின் ஆரம்பம் என்றே கூறலாம். ஏனெனில் இதுவரை இடம்பெற்ற புலிகளுக்கு எதிரான போர்களில் புலிகள் குறிப்பிட்டளவு எதிர்ப்பை காட்டுவதும் பின்பு பின்வாங்கி தம்மை தற்காத்துக் கொள்வதிலுமே ஈடுபட்டு வந்தனர். அத்துடன் இராணுவத்தை நிலைகொள்ள வைத்தபின் கொரில்லாப் பாணியிலான தாக்குதல்களை மேற்கொள்வதிலேயே கவனம் செலுத்தி வந்தனர். ஆனால் வன்னிப்போரில் கடந்தகால நடைமுறைகளுக்கு மாறாக முடிந்தளவிற்குப் பின்வாங்காது எதிர்த்து தாக்குதல் நடத்துவதிலேயே புலிகள் கவனம் இருக்கப் போகின்றது.

புலிகளின் இத்தகைய எதிர்த்தாக்குதல்களுக்கு வலுவான காரணங்கள் இல்லாமலும் இல்லை. அதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று புலிகளின் இறுதித் தரிப்பிடமான முல்லைத்தீவு மாவட்டக் காடுகளை ஊடறுத்துச் செல்ல இராணுவம் முன்னேறுகின்றது. இது அவர்களது இதயத்தை ஊடறுப்பது போன்றதாகும்.

இரண்டாவது வவுனியா யாழ்ப்பாண வீதியை இராணுவம் கைப்பற்றினால் புலிகளின் பலம் வன்னிப்பகுதியில் இரு கூறாக்கப்பட்டுவிடும். மூன்றாவது வெலிஓயா-நெடுங்கேணி வழியாக முன்னேறும் இராணுவ நடவடிக்கையால் கிழக்கிற்கான புலிகளின் பாதை தடைப்படலாம். நான்காவது புலிகளிடம் நீண்டதூர ஆட்லறிப் பீரங்கிகள் கைவசம் இருக்கின்றன. ஐந்தாவதாக புலிகள் இயக்கம் யார் விரும்பினாலும் விரும்பாதுவிடினும் ஓர் சக்தி மிக்க கொரில்லா இராணுவத்தை கொண்டிருக்கின்றது.

மேற்கூறியவற்றை நோக்குமிடத்து தவிர்க்க முடியாத சூழலில் புலிகள் தமது முழுப்பலத்தையும் வெளிக்கொணர்ந்து வன்னிப்போரில் இராணுவத்தை எதிர்த்து நிற்கவே செய்வர். இராணுவத்தைப் பொறுத்தமட்டில் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகளின் பயிற்சி மட்டுமன்றி தற்போதைய காடுகளை ஊடறுத்து செல்லும் வியூக அமைப்பிலும் வழி காட்டப்படுகின்றனர். முழு இராணுவப்பலமும் தற்போதைய வன்னிப் போரில் பயன்படுத்தப்படுகின்றது. தமது ஆட்பலத்தை ஈடுசெய்வதற்காக கடற்படையினரையும் தரை யுத்தத்தில் பங்கு கொள்ள வைக்கப்பட்டுள்ளது. எனவே இராணுவ மும் தனது யுத்த முனைப்பின் முழு வேகத்தில் இருந்தும் பின்வாங்கமாட்டாது என்றே கொள்ளமுடிகின்றது. இவற்றை நோக்கும் போது வன்னிப் போர் மிகவும் கடுமையான தாகவும் அமைந்துள்ளது.

> அரசின் சமாதானமும் இராணுவத்தின் மீட்பும் மேன்மேலும் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கவே வழிவகை செய்திருக்கின்றது. ஏற்கனவே இடம்பெற்ற போர்களின் முடிவும் இதுதான் என்றால் வன்னிப் போரினால் புதிதாக எதுவும் இடம்பெற்று விடப் போவதில்லை.

தற்போது இராணுவம் புளியங்குளம் வரையிலுமே முன்னேறியுள்ளது. அப்படியானால் புளியங்குளத்தில் இருந்து கிளிநொச்சி வரையான 30 மைல்கள் நீண்டதும் அடர்ந்த காடுகள் கொண்டதுமான வவுனியா-யாழ் வீதியை இராணுவம் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு பல மாதங்கள் ஆகலாம். ஏனெனில் குடாநாட்டின் 'ரிவிரச' முதலாவது இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொள்ள சுமார் 3 மாதங்கள் சென்றன. சுமார் 12 மைல்களைக் கடக்கவே இம்மூன்று மாதங்கள் சென்றன. வெளிப்பகுதிகளும் வீடுகளும் விவசாய நிலங்களைக் கொண்டதுமான வலிகாமம் கிழக்கில் இருந்தே அவ் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறெனில் காட்டுப் பகுதிகளைக் கொண்ட 30 மைல்களை எத்தனை மாதங்களில் இராணுவம் கைப்பற்றப் போகின்றது என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

சரி ஒருவாறு எந்த விலையைக் கொடுத்தாவது (வன்னிப்போரின் மூலம்) வவுனியா-யாழ் நெடுஞ்சாலை கைப்பற்றப்பட்டாலும் கூட வன்னிப்போர் என்பது எச்சந்தர்ப்பத்திலும் முடிவுக்கு வரப்போவதில்லை. அப்படியானால் போரின் மூலம் சமாதானம் என்பது எந்தளவிற்கு சாத்தியமாகப் போகின்றது. அதிலும் குறிப்பாக வன்னிப்போர் எந்த வகையில் சமாதானத்தை கொண்டு வரப்போகின்றது என்பதே கேள்வியாகும்.

அரைகுறை நிலையில் காணப்படும் அதிகாரப்பகிர்வு யோசனை அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடிக்கடி கொதித்துக் கொண்டிருக்கின்றார். இடையிடையே தமிழ்க் கட்சிகளை அழைத்து பசியால் அழும் குழந்தையின் கவனத்தை திருப்ப கிலுக்கிகளையும் பீப் பீப் குழல்களையும் கிலுக்கியும் ஊதியும் காட்டுவது போல் காட்டிக் கொண்டிருக்கின்றார். வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் தனது வெளிவிவகார கெட்டித்தனத்தால் இதோ சமாதானம் அதோ சமாதானம் எனக்கூறி உலக நாடுகளின் கவனத்தை திசைதிருப்ப முயல்கிறார். ஆனால் யுத்த அமைச்சரான பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த தனது தளபதிகள் சகிதம் முழுமூச்சுடன் போரை வன்னி நோக்கி வழிநடாத்திக் கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் நாட்டில் சமாதானம் என்பதோ கானல் நீராகவே காட்சியளிக்கின்றது என்றே கூற வேண்டும். எனவே போரின் மூலம் சமாதானம் சாத்தியமற்றதாகும். நியாயமான தீர்வு யோசனைகளும் அதற்கான பேச்சுவார்த்தைகள் மூலமாகவே உண்மையான சமாதானம் தோன்ற முடியும்.

வன்னி நிருபர் விக்ரர்

படிப்பகம்

www.padippakam.com



# பிரான்சில் நடைபெற்ற 23வது இலக்கியச் சந்திப்பு

## சில குறிப்புகள்

23வது இலக்கியச் சந்திப்பு கடந்த மாதம் 13-14ஆம் திகதிகளில் பிரான்சிலுள்ள கார்ஜ் லே கொனஸ் என்னும் இடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், இலங்கையிலிருந்தும் பல்துறை சார்ந்த எழுத்தாளர்கள் கலந்து கொண்ட இவ் இலக்கியச்சந்திப்பில் தலித்திய நாடகஅரங்கு, சிங்கள நாவல் இலக்கியம், ஈழத்தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றையநிலை, ஆங்கில நாவல் விமர்சனம், காலம் பற்றிய விஞ்ஞானக் கருத்தோட்டம் போன்ற தலைப்புகளில் ஆற்றப்பட்ட உரைகள் சிறப்பாய் அமைந்தன. 'இனியும் சூல் கொள்' என்ற மகுடத்தில் இச்சந்திப்பில் வெளியிட்டு வைக்கப்பட்ட மலர் இந்நிகழ்வினை மேலும் செழுமைப்படுத்தியது.

### அராஜகத்திற்கு எதிரான குரல்

"ஐரோப்பாவின் புகலிடத் தமிழர்கள் மத்தியில் இலக்கியச் சந்திப்பு உறுதியான தடங்களைப் பதித்திருக்கின்றது. மனித உரிமை மீறல்கள் குறித்த எதிர்ப்புக்களை இது எதிரொலித்திருக்கின்றது. திறந்த மனதோடு சமூகவியல் பிரச்சனைகளை ஆராயும் பக்குவத்தை இது வளர்த்திருக்கின்றது. எந்த சமரசத்திற்கும் இலகுவில் விலையாகி விடக்கூடிய எழுத்தாளர்களை இது இனங்கண்டு கொண்டிருக்கின்றது. அராஜகத்திற்கு எதிரான குரலை உரத்து முழங்கியிருக்கின்றது. புகலிடத் தமிழர்களின் அரசியல் நோக்கே இந்த இலக்கியச் சந்திப்பின் ஆதார சுருதியாகும். சந்தர்ப்பவாதிகள், சமரசக்காரர்கள் ஆகியோருக்கு எதிரான தீவிர கருத்து நிலைப்பாட்டினை இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சி என்றும் வலியுறுத்தியிருக்கின்றது" என்று மு.நித்தியானந்தன் குறிப்பிட்டார்.




மு. நித்தியானந்தன், வ.ஐ.செ. ஜெயபாலன்

வியாக்கியானங்கள் பொய்யானவை. ஒழுங்காய் மாதாமாதம் சீட்டுக்கட்டிக் கொண்டு தமிழ் சினிமா வீடியோக்களின் முன் உட்கார்ந்தவாறு தங்களின் சாதிபார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டு குழந்தைகள் பெற்று வாழும் மனிதனும் இவன் தான். இவனை விசித்திரப் பிறவியாக நினைத்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய தில்லை.

யாதது குறித்தும் தமிழில் பேச முடியாதது குறித்தும் வெட்கப்படுவதாகத் தெரிவித்தார்.

உரையின் முடிவில் சபையோரிடமிருந்து கேள்விகள் எழுந்தபோது முதன்முதலில் ஒரு ரசிகர் கேள்வி எழுப்பினாரே பார்க்கலாம்.

"ஏன் நீங்கள் தமிழ் நாவல்களை தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்க்கக் கூடாது"

கையை பல்வேறு பிரதேச களங்களின் பின்னணியில் சிவானந்தன் வெகு நேர்த்தியாகக் கொணர்ந்திருக்கிறார். தங்களின் குறுகிய மன அருசைகளின் இருளில் இந்த நாவலின் மீது வீசப்படும் சேறடிப்புக்களை மீறி இந்நாவல் நிலைபெறும்" என்று இந்நாவல் மீது விமர்சனவுரை நிகழ்த்தும்போது நித்தி குறிப்பிட்டார்.

### தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே புதிய உறவுமுறை

ஈழத்தின் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள விரிசல்கள் இப்போது இருதரப்பினராலும் புதிய கண்ணோட்டத்தில் அணுகப்பட்டு வருகின்றன. கடந்து போன காலங்களில் போராட்டச் சூழலில் தமிழ்த் தலைமையும் முஸ்லிம் தலைமையும் பல தவறுகளை விட்டிருக்கின்றன. இன்று அந்தத் தவறுகளை ஏற்றுக் கொள்ளவும் அவற்றிற்கு நிவாரணம் காணவும் இரு தலைமைகளுமே திறந்த மனதோடு பேசித் தீர்க்க முன்வந்திருப்பது முக்கியமான அம்சமாகும் மேற்கண்டவாறு கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் முஸ்லிம், மலையக மக்களின் பிரச்சனைகள் என்ற பொருளில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

### தலித்தியத்தின் போராட்டத் தேவை

"எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்ற தனித்துவ அரசியல் போக்காக தலித்தியம் இன்றைய தமிழ் சூழலில் தன்னை நிலை நிறுத்தி இருக்கின்றது. ஆனால் யாழ்ப்பாண சூழலில் இன்றும் ஊறிப்போயிருக்கின்ற மேட்டுக்குடி வேளாள சாதித்துவத்திற்கு சவாலான ஓர் எதிர்ப்பியக்கத்தின் தேவை இன்றும் நம் சமூக சூழலில் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இந்த சாதித்துவத் திமிரை வெளிப்படுத்த இவர்கள் வெட்கப்படுவதில்லை. அருவருக்கத்தக்க இழிந்த இந்தப் போக்கு சமுதாயத்தளத்தில் இருந்து அகற்றப்படும் வரை தொடர்ந்த நீடித்த போராட்டம் நம்முள் உள்ளது. இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தம்மைத் தலித்துக்களாக இனம் காணும் ஒவ்வொருவரும் இந்த இயக்கப் போக்கில் அணிசேர்வது ஒரு வரலாற்றுத் தேவையின் முடிவு". மேற்கண்டவாறு கவிஞர் சுகன் தனது உரையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் தலித்திய அரங்கியல் குறித்து உரையாற்றிய சோர்போன்(Sorbonne) பல்கலைக் கழக கலாநிதிப் பட்ட ஆய்வாளர் திரு அரவிந் அப்பாத்துரை தனது சிறப்புரையில் இந்தியாவில் தலித்



மணி சுப்ராயன்

துக்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தபொழுது தமக்கு முன்னுதாரணமாக கொள்ளத்தக்க நிகழ்வுகள் இந்திய சரித்திரத்தில் இல்லையென்று கருதினார்கள். இந்தியாவின் சரித்திரம் நூற்றாண்டுக் கணக்கில் தலித்துக்களை அடக்கி ஒடுக்கிய சரித்திரமே ஆகும். எனவே தான் இந்திய தலித்துக்கள் தாங்கள் பின்பற்றக் கூடிய உதாரணங்கள் இந்திய சரித்திரத்தில் இல்லையென்று கருதினார்கள். தங்களின் போராட்ட முன்னுதாரணங்களை அவர்கள் அமெரிக்க கறுப்பின போராட்ட வரலாற்றில் இருந்து கற்றுக் கொண்டனர்.

அமெரிக்காவின் 'தலித் சிறுத்தைகள்' (Dalit Panthers) எனப்படும் அமெரிக்க கறுப்பின மக்களின் போராட்டங்களை அவர்கள் முன்னுதாரணமாக கொண்டார்கள். ஒடுக்கப்பட்ட இனம் தங்களின் எழுச்சிக்கு பிறிதொரு ஒடுக்கப்பட்ட இனத்தின் வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதில் புதுமை




ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், ந. சுசீந்திரன்

### அ.சிவானந்தனின் 'When Memory Dies'

அ. சிவானந்தனின் ''When Memory Dies' என்ற நூல் சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையில் நடைபெற்ற கலப்பு மணங்களில் ஏற்படும் பிரச்சனைகளை வெகு இயல்பாகச் சித்தரித்திருக்கிறார். ஆயினும் அரசியல் தலைவர்களின் பெயர்களை மாற்றி மாற்றி அல்லது திரிபு படுத்தியிருப்பதும் மலையகத் தமிழர்களைக் கூலிகள் என்று குறிப்பிட்டிருப்பதும் விமர்சிக்க வேண்டிய அம்சங்களாகும் என்று ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற ஆங்கில நாவல் விமர்சன அரங்கில் உரையாற்றிய மல்லிகா குறிப்பிட்டார்.

"இலங்கை அரசியலின் நூற்றாண்டு வாழ்க்கையின் அசலான பதிவாக அ.சிவானந்தனின் 'When Memory Dies' என்ற ஆங்கில நாவல் வெளியாகி உள்ளது. மூன்று தலைமுறைகளின் வாழ்க்

### 'இனியும் சூல் கொள்' சிறப்பு மலரை 'நித்தி' வெளியிட்டு வைத்து உரையமற்றினார்

"பிரபலங்களைத் தேடிப் போகாமல் ஆற்றல்களைத் தேடி இந்த மலர்க்குழுவினர் அரிய தொகுப்பை வெளிக் கொணர்ந்திருக்கின்றனர். புகலிடத்தின் எழுத்து ஆற்றல்களை வெளிக் கொணர்வதில் இம்மலர் பெரும் வெற்றி பெற்றிருக்கின்றது. தமிழன், சிங்களவன் என்ற இனத்துவக் கூறுகளை மீறி மல்லிகா, ரெஜி சிரிவர்த்தன போன்ற சிங்கள எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் இது உள்ளடக்கியிருப்பது மலரின் விரிந்த அகலுலகக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகின்றது. புகலிடத்தில் வாழும் தமிழர்கள் விசித்திர கிரகங்களிலிருந்து உருவான மனிதர்கள் என்ற மாதிரி

இந்தச் சாதாரண மனிதர்களின் பிரச்சனைகளை, மனவுலக மோதல்களைச் சித்தரிக்கும் சிறந்த ஆக்கங்களை இந்த மலர் வெளிக் கொணர்ந்திருக்கின்றது" என்று, நித்தி மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

### 'சிங்கள நாவலும் உலக இலக்கியமும்'

பாரிஸில் வாழும் சிங்கள எழுத்தாளர் காமினி வியாங்கொட லத்தீன் அமெரிக்க எழுத்துக்களைச் சிங்களத்திற்கு அறிமுகப்படுத்துவதில் முதன்மையானவர். காப்ரியல் கார்ஸியா மார்க்கேஸ், இஸபெல்லா அயந்தே ஆகியோரின் நாவல்களை சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார்.

'சிங்கள நாவலும் உலக இலக்கியமும்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் தனக்கு தமிழ் தெரி




சுகன், அர்விந் அப்பாதுரை

www.padippakam.com





காமினி வியாங்கொட, திரு. நாராயணன்

எதுவுமில்லை.

விலங்குகளைத் தவிர இழப்பதற்கு எதுவுமில்லாத ஒரு சனக்கூட்டம் உலகின் எந்த மூலையிலிருந்தும் தமது போராட்டத்திற்கான மூலங்களைத் தேடமுடியும் என்று குறிப்பிட்டார்.

தலித்திய அரங்கியல் அமர்வு ஆரம்பித்தபொழுது மேடையில் தும்புத்தடியும் செருப்பும் வைத்து அதனைத் தொடங்கியது 'குத்து விளக்கு' பாரம்பரியத்திற்கு ஒரு அடியாக இருந்தது.

## 'காலம் பற்றிய சுருக்க வரலாறு'

"பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றிய விஞ்ஞான சிந்தனையில் பெருவெடிப்புக் கோட்பாடு (Big Bang Theory) மகத்தான ஒரு திருப்புமுனையைத் தொட்டுக் காட்டு கின்றது. நவீன விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சி விண்வெளியிய லில் நாம் நினைத்துப் பார்க்க முடியாத தகவல்களையும் விபரங்க ளையும் எமக்குத் தேடிக் கொடுத்தி ருக்கின்றது. ஐன்ஸ்ரைனின் சார்பு நிலைக் கோட்பாடு மேலும் ஸ்திரம் பெறுவதோடு விஞ்ஞான சிந்தனையை சரியான திசையிலும் வழி நடத்திச் சென்றிருக்கின்றது. சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சியில் பாதிப்புச் செலுத்திய தனி மேதையாக ஐன்ஸ்ரைன் விளங்கு கின்றார்" என்று, 'காலம் பற்றிய சுருக்க வரலாறு' என்னும் பொருள் பற்றி, ஜேர்மனியில் விஞ்ஞான ஆய்வாளராக பணிபுரியும் மணி சுப்பராயன் உரையாற்றுகையில் தெரிவித்தார். விஞ்ஞான ஆய்வுப்பட்டறை மாதிரியில் அமைந்த இவரது விஞ்ஞான உரைக்கு நா.கண்ணனின் பங்களிப்பும் சிறப்பாய் அமைந்தது.



தேவா ஹெரால்ட், விஜி

தொகுப்பு: P கனேஷ்
படங்கள்: கிருஷ்ணராஜா

## அணில்கூடு

மலை வடித்த நீரிலும்
முலையறுத்த இரத்தம்
மண்ணளையும் சிறுபூக்கள்
மணமரிந்து
முட்களினால் போர்த்தியதார்
நிணம் மிதக்கும்
நீர் முகர்ந்து
சப்பியைத் துப்பின
வயல்கள்
குரங்கு பிய்த்த
அணில் கூடாய்
குதித்தோடி
அலையெறிந்து ஆர்ப்பரித்து
தடமளிக்கும் கடல் கடந்தோம்
இனவாதக் களையகன்றோம்
நிறவாத வினையறுக்க
முகமிழந்தோம்
முதையர் தோட்டத்து
முகவரி தொலைந்தோம்
வடலிபனை நாமிழந்தோம்
வாடையிலே தலைவிரிக்கும்
தெங்கின் சுவை மறந்தோம்
குயில்களின் இசை இழந்தோம்
கொண்டையும் கோர்த்து விட்ட
சதங்கையுமாய்
கொஞ்சுகிற பயிர் களைந்தோம்
இளமையும் ஈரக்காற்றும்
உயிர்ப்பான உறவோடு
ஊசிமல்லி வாசம்

இவையெல்லாம் நாமிழந்தோம்
ஆண்டாண்டு தோறுமழுது புரண்டு
மாண்டாரை நினைகொள்ளும்
நிலைமீண்டு
நாளோடும் பொழுதோடும்
மணியோடும் கணத்தோடும்
காதோடு ஒலிக்கின்ற
ஒப்பாரி தான் தவிர்த்து

- S.ரகுபதி

நெதர்லாந்து, சுவிசர்லாந்து, கனடா, பிரான்ஸ், நோர்வே, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கான மக்களின் நல்லாதரவைப் பெற்ற
தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் வருடாந்த நாடக விழாக்கள்
வெஸ்டன் ஜுவல்லர்ஸ் ஆதரவில்
நாடக விழா-97




இந் நிகழ்ச்சியில் சேகரிக்கப்படும் நிதி தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் நூல் வெளியீட்டுக்கு பயன்படுத்தப்படும்
தொடர்புகளுக்கு:
0181-459 4335 / 0181- 470 7883 / 0181-509 2092

8.11.97 சனி மாலை 6.45 மணி
Winston Churchill Hall
Pinn Way, Ruislip, Middx.

15.11.97 சனி மாலை 6.45 மணி
Walthamforest Theatre, Lloyd Park,
Winns Terrace, Walthamstow, London E17

BOTH PROGRAMMES ARE BEING SPONSORED BY: WESTERN JEWELLERS 230 UPPER TOOTING ROAD, TOOTING, LONDON SW17 7EW TEL: 0181-767 3445

படிப்பகம்

# பரிசுத்த ஆவி

ஏ.எம். ஜாபீர்



எப்படியோ லண்டனுக்கு வந்தாகிவிட்டது என்று ஆசுவாசப்பட்டது இன்று ஆபத்தாகியது போல் தோன்றியது. காலையில் அந்த டெலிபோன் அலறாமல் இருந்திருந்தால், அல்லது "விடுதலையே என் மூச்சு" என்று நான் நாட்டை விட்டுக் கிளம்பும் போது என்னை அவமானப்படுத்திய அந்த நண்பன் என் இன்னொரு நண்பனால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி எனக்கு தெரிவிக்கப் படாது இருந்திருந்தால், அல்லது கூடி நின்ற நண்பர்கள் என் சோகத்தைப் பார்த்து பரிக சிக்காது, (நக்கல் சிரிப்பை உதிர்க்காது) இருந்திருந்தால், இன்னும் "எப்படி இது நடந்திருக்கும்?" என்று என்னையே நான் கேட்டுக்கொண்டதற்கு அவர்கள் "நீங்கள் தானே தொடக்கி வைத்தீர்கள்" என்று என் மேல் வெறுப்பை உதிராமல் இருந்திருந்தால், அதுவும் ஏன், இந்த கொலையைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாதே, நான் எப்படிப் பொறுப்பாக முடியும் என்று கத்தியழுதபோது சுட்டவனுக்கோ, சுடப்பட்டவனுக்கோ, உனக்கோ, எனக்கோ இந்த கொலையைப்பற்றி எதுவும் தெரியப் போவதில்லை என்றும் இதற்கு நாம் எல்லாருமேதான் பொறுப்பு என்று அவர்கள் காட்டுக் கத்தல் போடாமல் இருந்திருந்தால் எல்லாம் நன்றாகத்தான் இருந்திருக்கும். இந்த லண்டன் வாழ்க்கை தேம்ஸ் நதியைப்போல் அமைதியாக ஓடியிருக்கும். நான் புதிதாக வேண்டிய வீடும், அண்மையில் தேடிய காதலியும், என் கென்ரக்கி சிக்கின் வேலையும் என் சிந்தையை நிறைத்திருக்கும்.

முடியவில்லை. எதற்குமே முடியவில்லை. சமைக்க, சாப்பிட, நாள் தவறாமல் பார்த்து பேசும் காதலியைக் கூட காண முடியவில்லை. தனிமையாய், மேலும் மேலும் தனிமையாய், எனக்குள் நானே சுருங்கிப் போகவேண்டும் போல் இருந்தது.

ஆறுமணி வரை லண்டன் மறந்து துப்பாக்கியுடன் களத்தில் திரிந்து கொண்டிருந்தேன். தொட்டது முதல் விட்டது வரை எல்லோர் கண்களும் ஏதோ ஒரு வகையில் வெறுப்பை உமிழ்வது போல் என் மேல் பரவி சிறுக வைத்தது. நான் குஷ்டரோகியாய் என் நாற்றத்தை நானே தாங்க முடியாமல் போன போது முட்கள் ஒரு நேர்கோட்டுக்கு வந்து கென்ரக்கி சிக்கினை ஞாபகமூட்டியது. வேலைக்கு வெளிக்கிட்டேன்.

உடல்களைப்பாக சோர்வாக இருந்தது. என்ன வேலை? என்று நினைக்கும்போது அவலமாக பல கேள்விகள் முளைத்து என்னை அவமானப்படுத்தியது. என்ன அவமானம்.?

சீ . . . துப்பாக்கி ஏந்திய கைகள். . . கோழியறுத்து...

துப்பாக்கி எத்தகைய புனிதமானது. புனிதமானது?

"துப்பாக்கி தூக்கக்கூடாதவை" என்பதெல்லாம் மாறி எப்போது புனித பாத்திரம் ஏற்றன என்பதெல்லாம் இப்போதைக்கு தேவைப்படாத சமாச்சாரம். ஒருவேளை தேவைப்பட்டால் விடுதலை கறைபட்டுப்போகும். எனினும் எல்லாம் விட்டு நான் இப்போ உயிர்கள் அறுத்து எரித்துப் பொசுக்கி இன்பத்தோடு உணவளிக்கும் கென்ரக்கி சிக்கின் ரெஸ்ரோறன்றுக்குள். வெள்ளை யுனிபோம் போட்டுக் கொண்டு (போட்டுவிட்டால் இரத்தக்கறை படாதா என்ன) கோழிகளைத்தூக்கி மேசையில் எறிந்தேன். ஆமி கடந்து போன வெளிக்குள் கிடந்த உடம்புகள் போல் சிதறிக் கிடந்தது.

அவர்களுக்கு சுட்டபின் வெட்ட வேண்டிய அவசியம் அவ்வளவாக வந்து விடுவதில்லை. எங்களுக்கு என்னவோ அதுவும் வந்து வாய்த்துவிடுகிறது.

நான் வெகு லாவகமாக கத்தியை தீட்டியபடி அந்தக் கோழிகளைப் பார்த்தேன். மீண்டும் மீண்டும் அதே ஆமி கடந்து போன வெளியும் பிணக்குவியல்களும் கண்முன் வந்து போயின. இடக்கையால் தலையைப் பிடித்து வலக்கையால் ஒரு கொத்து. தலை தறித்த மறுகணம் குப்பைவாளிக்குள் எறிந்தேன். நிதானமற்று ஏதோ நினைத்தவனாக சடுதியாக குப்பை வாளியைப் பார்த்தேன். அங்கே கண்கள் பிதுங்கிய காண்டீபன். அவன் எப்படி அதற்குள் வந்தான்? யார் கண்டார் எவன் எவன் எப்படிப் போவான் என.

நீ எந்த இயக்கம் என்று கேட்டபோது ஏதோ ஒரு மனித இயக்கம் என்று சொல்லி மறைந்த அதே காண்டீபன். எங்களைவிட இன்னொரு மனித இயக்கமா? அவனுக்கு வேண்டியதுதான்.

கண்களை வெளியே இழுத்து கத்தியில் கவனம் செலுத்தினேன். மீண்டும் அல்பிரட்டின் தலை தேவையற்றது என அதே குப்பைவாளிக்குள் போட்டேன். என் கண்கள் குப்பைவாளியில் இருந்து மீளமறுத்தது. அவன் என் பெரியமாமாவின் மகன். அவனும் விடுதலைக்காக வெளிக்கிட்டவன்தான். என் பேச்சைக் கேட்க மறுத்தவன். தன் துப்பாக்கியும் சுடும் என்றவன். போனவை போனவைதான். பிழைக்கத் தெரியாதவர்கள்.

முள் தைத்தாற்போல் உள்ளுணர்வில் ஓர் உறுத்தல். உடல் சற்று அதிர்ந்தது. தலை சுற்றிக்கொண்டு வந்தது. கண்கள் பஞ்சடைந்தது போல் பனிமூட்டமாகிக் கொண்டு வந்தது. மீண்டும் கண்கள் குப்பை வாளியை கிளறியது. என் தலையும் அதே வாளிக்குள். எவன் செய்தான் இக் காரியத்தை. அப்பட்டமான துரோகம்.

துரோகிகள். சமூகவிரோதிகள். நாசமாய்ப் போக..

என் இரு கைகளாலும் கன்னங்களைத் தொட்டுப்பார்த்தேன்.

ஒரு கணம் கொள்ளி எறும்புகள் கடித்துத் தடித்த கொழுக்கட்டை போல் இருந்தது. மறுகணம் செத்த பிணம்போல சூடற்ற உப்பிய சதைபிய்ந்து வருவதுபோல் இருந்தது. எங்கள் ரமணனைத் தேடிக் கண்டு பிடித்து தூக்கும்போதும் இப்படித் தான் எலும்புதான் தனியே கழன்று வந்தது.

நான் என் கைகளை கன்னங்களில் இருந்து மீட்டேன். கைகள் பிசுபிசுத்தன. நம்பமுடியாமல் திரும்பவும் திரும்பவும் பார்த்தேன். கை முழுவதும்பச்சை இரத்தம். இப்போதுதான் சுட்டதுபோல் இன்னும் இன்னும் சூடாக..

கைகளைத் தண்ணீர்க் கொட்டுக்குள் புதைத்தேன். கொட்டுத் தண்ணி எல்லாம் இரத்தமாக இருந்தது. அடி அடைப்பைத் திறந்து இரத்தத்தை வெளியேற்றினேன். பைப்பைத் திறந்தேன். தண்ணீரைக் காணோம். இரத்தம்தான் கொப்பளித்தது. எவன் குருதியோ?

என் உடம்பெல்லாம் சிவப்பேறி வருவதுபோல்தோன்றியதும் திரும்பினேன். குசினி களத்தின் புழுதியலைபோல் புகைமூட்டமாக. எதுவும் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஏதாவது செய்தாக வேண்டும் போல் இருந்தது. என்ன செய்வது என்று ஒரு வழியும் தோன்றவில்லை. எது என்னவானாலும் இந்த கென்ரக்கி சிக்கனை விட்டு வெளியே ஓடவேண்டும் போல் ஒரு உத்வேகம் எடுத்தது. எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு பிசாசைப் போல் வெளியேறினேன்.

இனம் காத்த துப்பாக்கியும்
எதிர்த்த துப்பாக்கியும்
மதம் காத்த துப்பாக்கியும்
எதிர்த்த துப்பாக்கியும்
இனத்தையும் மதத்தையும்
துப்பாக்கியாக்கி மனிதனைச் சுட்டது.
இயக்கம் காத்த துப்பாக்கிகள்?

வீடு வந்து சேர்ந்தேன். உழைத்த களைப்புப் போலும் எல்லோரும் பிணங்களைப் போல் பிரண்டு கிடந்தனர். நானும் உயிர் கழற்ற ஒரு அறைக்குள் நுழைந்தேன்.

உள்ளத்தின் கனம் உடலெல்லாம் வியாபித்துப் பரவ கண்கள் மயங்கின. பிணங்களுடன் பிணங்களாய் ஐக்கியமானேன்.

பாழாய்ப்போய் இடிந்து விழுந்த பண்டைய நகருக்குள் நான் வீரவாளுடன் நெஞ்சை நிமிர்த்தி. எங்கும் இரத்தச்சகதி. பிண நாற்றம். நான் உடல்களில் கால் புதைய மேலும் மேலும் உரமாக கால் வைத்து முன்னேறுகிறேன். உயர உயரப் போகிறேன். சூறாவளியைப் போல்- எரிமலை நெருப்பை உமிழும் சத்தம். நிலமெல்லாம் வெடித்துப் புகைந்தது. மரங்களும் மாடிகளும் இருந்த இடம் மறைந்துபோக அங்கே தலையற்ற முண்டங்கள், கால் அற்ற உடம்புகள் முளைத்தன. பேய்க் காற்றில் கைகளும் கால்களும் தலைகளும்- சருகாய் மேலும் கீழும் பறந்தன. என் கால்கள் அந்த சருகுள் ஆழமாய்ப் புதைந்து புதைந்து. . . இப்போது கழுத்துவரை புதைந்துவிட்டேன். அசையவே முடியவில்லை. மேலும் மேலும் விடாப்பிடியாக முயற்சித்தேன். முடியவே இல்லை. அத்தருணம் வானத்தில் இருந்து கொட்டுவது போல் பிணங்கள் என்மீது விழுகின்றன.

நான். . . . ஐயோ. . . . .

பதறிக்கொண்டு எழுந்தேன். வீட்டில் இருந்த எல்லோரும் ஏற்கனவே எழுந்திருக்க வேண்டும். அவர்கள் வாசலில் நின்றபடியே என்னை ஒரு தினுசாக அர்த்தம் விளங்கிக் கொண்டவர்களைப்போல் பார்த்தார்கள். எனக்கே என்மீது அனுதாபமும் அவமானமும் கலந்த உணர்ச்சி தோன்றியது. அவர்களைப் பார்க்க மனது கஷ்டப்பட்டது. மீண்டும் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு குப்புறப் படுத்தேன்.

பெருமூச்சு ஒலிகளுடன் சரசரத்து அடங்கிய சத்தம் சிறிது நேரத்தில் குறட்டையாகத் தொடர்ந்தது. கரடியின் உறுமல் போல் வெருட்டும் குறட்டை. கரடிகள் அடைத்த கூட்டுக்குள் நான் தனியே இருப்பது போல் அச்சம் தோன்றியது. என்னால் சிறிது நேரமாவது செத்துப் போய் இருக்க முடியாதபடி மூளை துருதுருத்து கேள்வி மேல்கேள்விகள் கேட்டது.

என்னால் கொலை செய்யப்பட்ட, செய்விக்கப்பட்ட, யாரோ செய்வதையும், செய்விப்பதையும் கண்டும் காணாமல் போனபோது மாண்டுபோன ஒவ்வொருவரும் என் முன்னால் கூடினர். அவர்கள் மாநாடு நடத்தி திட்டம் தீட்டத் தேவையில்லை. ஒவ்வொருவர் கண்களும் தோட்டாக்களைத் துப்பும் குருதிக் குழல்கள்.

கனவு நித்திரையிலா, நித்திரைக்கு முன்னரா வருகிறது? நித்திரைக்கும் நித்திரையின்மைக்கும் இடையிலா தெரியவில்லை. ஆனால் எனக்கு விழித்தபடியே தான் கனவுகள் தொடர்கின்றன. சிதையில் கிடப்பது போல் கட்டில் தணலாக எரித்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. உயிருடன் நானும் எரிந்து போவேனோ என அச்சம் எழ போர்வையை இழுத்து விசிறிவிட்டு கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தேன்.

தெருவில் யாரோ ஓரிருவர் தான். நிம்மதியைத் தொலைத்துபிசாசாய் அலைவது போல்.

நானும் பிசாசாக ஆகக் கூடாது. நான் என்னைப்பற்றி ஒழுங்காகச் சிந்தித்து ஓர் சுமுகமான நிலைக்கு என்னைக் கொண்டு வரவேண்டும்.

நான் இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறேன். என்ன நடந்துவிட்டது.

இல்லை. இல்லை. என்னவோ நடந்து விட்டதுதான். அது எப்போது நடந்தது என்பதுதான் இப்போது முக்கியமான கேள்வி. நான் எல்லாவற்றையும் நினைவுக்குக் கொண்டுவரவேண்டும்.

www.padippakam.com



இது தேவைதானா? இது அவசியமே இல்லாத விடயம். நீ இப்போ 7000 மைல்கள் கடந்து லண்டன் வந்துவிட்டாய். இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே உன்னை ஒன்றும் பண்ணமுடியாது. நீ ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை.

பயம். அது எனக்கு இருக்காத, இருக்கக்கூடாத ஒன்று. ஆயினும் அது எனக்கு தேவையில்லை.

இப்போ பிரச்சனை எங்கே தொடங்கியது என்பதுதான். அதற்காக நான் எல்லாவற்றையும் நினைத்தாக வேண்டும்.

நான் எப்போது இயக்கத்திற்கு போனேன்?

எப்போது இயக்கத்தை விட்டேன்?

எப்போது லண்டனுக்கு வந்தேன்? என்று ஒரு ஒழுங்காகச் சிந்திக்க வேண்டும்.

இல்லை. இல்லை. இது தேவையில்லாத விடயம். இது எல்லாம் நாள் கணக்குப் பார்த்து தேதிகள் பட்டியல் போடும் விடயம்.

எப்போது என்றதை ஏன் என்று மாற்ற வேண்டும்?

ஏன் இயக்கத்திற்கு போனேன்?

ஏன் இயக்கத்தை விட்டேன்?

ஏன் இங்கு வந்தேன்?

ஏன் இப்போது நான் இயக்கமாக இல்லையா?

இயக்கமே தெரியாதவர்கள் இயக்கமாக இல்லையா?

ஆமாம் இது அப்பட்டமான பொய்க் கேள்வி. ஒரு இயக்கத்தை அமைப்புக்குள் அமுக்கும் சமாச்சாரம். பல்வேறுபட்ட காரணங்களையும் கொலை செய்து ஒரே ஒரு காரணத்திற்கு மட்டும் வாழ்வு கொடுக்கும் சமாச்சாரம்.

எல்லோரையும் குற்றத்தில் இருந்து விடுவித்து என்மீதே குற்றத்தைச் சுமத்தும் அப்பாவித்தனம். இல்லாவிடில் யார் மீதோ குற்றத்தைப் போட்டுவிட்டு நான் மட்டும் தப்பித்துக்கொள்ளும் - தப்பித்துக் கொண்டதாக எனக்கு நானே காட்டும் பாசாங்குத்தனம்.

மொத்தத்தில் இது ஒரு குருட்டுக் கேள்வி.? அப்படித்தானே.!

அப்படித்தானே? வாய்விட்டு சற்று உயர்த்திய குரலில் கேட்டேன். Sorry. யாரோ அருகில் முளைத்தவன் கேட்டான். குரல் வந்த திசையில் திரும்பினேன். ஒரு முதிர்ந்த...வடஇந்தியனாகவோ பாகிஸ்தானியாகவோ இருக்கலாம். நான் அவனைப் பார்த்தபடியே மன்னிப்புக் கோரினேன். அவன் என்னைக் கூர்ந்து அசாதாரணமாகப் பார்த்தான். அந்தப் பார்வை எனக்கு மிகவும் பழக்கப்பட்ட, நித்தமும் என்னை எழுப்பி என் கண்களில் கத்தியைச் சொருகும் அதே பார்வை. இறக்கும்போதும் என்னைச் சபித்துச்சென்ற அதே பார்வை.. என் கண்களுக்குள்ளே குடியிருந்து என் நெஞ்சக் கபாலங்களை உதைத்து உதைத்து ஆன்மாவை எரிக்கும் அதே பார்வை.

அது ஒரு நிலவு மிதந்த காதல் இரவுதான். எதையும் உய்ப்பிக்கும் பலம் வாய்ந்ததாக. ஆனால் அவனுக்கோ சூனிய இரவாக, வாழ்வின் இறுதி இரவாக இருந்தது. எனக்கும் அது அப்படித்தான் என்பது அப்போது தெரியவில்லை. தோழர்கள் சில நிமிடங்களில் வெட்டிய அந்தக் குழியில் அவனைக் குத்திவைத்த போது அவன் என்னை அப்படிப் பார்த்தான்.

நான் தான் இந்த பிரபஞ்சத்தைவிடப் பெரியவன்! மனிதன் உருவாக்கிய ஆயிரமாயிரம் கடவுளர்களின் தலைவன்! கடவுளர்களால் உருவாக்க முடிந்த ஒரேயொரு மனிதன்!

முழங்கால்கள் நெஞ்சுடன் அழுத்த அதற்கிடையே அவன் நடுங்கும் இரு கைகளும் விரித்தபடி. அவனின் அனைத்துப் பகுதிகளும் அனைத்து இழைகளும் அசையாது என் கண்களில் நிலைகுத்திய அவன் கண்மணியில் கூட நடுக்கம். இறைஞ்சுகிறானா?

அந்த நடுக்கம் என்னில், நான் ஏறி நின்ற மண்சரிவில், மரங்களில், இருளில், நிலவில் அலைகளை எழுப்பிக்கொண்டே போயிற்று.

என்னில் ஓர் அச்சம் எழுந்து நான் நிலைகுலைய முன்னர் ஏதோ சொல்ல முனைந்தேனோ என்னவோ. ஒரு கையை உயர்த்தினேன். என் சைகைக்காகவே காத்திருந்த, விசுவாசத்தைக்காட்ட இதைவிட வேறு மார்க்கமோ சந்தர்ப்பமோ இல்லை என்பதை நன்றாக உணர்ந்தவன் மண்வெட்டியின் பின்புறத்தால் அவன் பிடரியில்... மானிடத்தை உலுப்பிய தட்டு....அந்த நேரத்தில் அவனால் எதுவுமே செய்ய சக்தியற்ற, முடிவுக்கு வந்துவிட்ட மனிதனாக அவன் இருந்தான். உண்மையில் நாம் அதைவிட மோசமான நிலையில்தானே இருக்கிறோம். அந்த உயிரை வாழவிட்டால் நாம் அழிந்து விடுவோம் என்பதுதானே. எமது அனைத்து இயக்கங்களையும் அந்த உயிரின் வாழ்வு அழிக்கும் வல்லமை - இல்லை. இல்லை. எமக்கு எந்த சக்தியுமே இல்லை என்பது தான்.

அவன் என்னதான் குற்றம் செய்தான்.? அவன் எந்தக் குற்றமும் செய்யாவிட்டாலும் அவன் பிறந்த குற்றத்திற்காக, அவனைக் காப்பாற்ற இந்த உலகத்தில் யாரும் இல்லை என்பதே.

இல்லை. பிறந்தது பிரச்சனையே இல்லை.

எங்கே பிறந்தது?

எந்த இனத்தில்?

எந்த மதத்தில்?

எந்த இயக்கத்தில்?

சுய நினைவுக்கு வந்தவனாய், அவன் சென்ற திக்கை நோக்கினேன். அங்கு ஆயிரமாயிரம் இஸ்லாமியர்கள். அவன் அதற்குள் எங்கோ அல்லது அவனே எல்லாருமாக வியாபித்து.

நான் ஊரை அள்ளி வரும் வெள்ளத்தில் அகப்பட்டதுபோல், ஒவ்வொன்றும் என்னை உருட்டிச்செல்ல வந்து நழுவியது போல். என் மெல்லிய நடையின் வேகத்தில் எல்லோரும் அசைந்துகொண்டு என்னைக் கவனித்தபடியே அல்லது கவனிக்காதபடி பாசாங்குத் தனத்தோடா....

அவர்கள் என்னை உதைக்க வருகிறார்களா? அல்லது எல்லாருமாக-எதுவுமே நிகழாததுபோல் என்னை நெருக்கி...

எதுவுமே நிகழவில்லை. இப்படி ஒரு மனிதனை காணவே இல்லை. இல்லை. இல்லை. இப்படி ஒரு மனிதன் பிறக்கவே இல்லையே என்று...ஆமாம் அவர்கள் ஜக்கட்டுகளுக்குள் வைத்திருக்கும் கைகள் றிவோல்வரின் வில்லைத் தொட்டபடிதான் இருக்கும். எல்லோரும் நெருங்கி வந்து உலகத்தின் கண்களை மறைத்துக்கொண்டு என்னைக் கொல்லப்போகிறார்கள்.

நான் என் நடையில் சற்று வேகத்தைக் காட்டினேன். அவர்களும் சற்று விரைந்தனர். நான் மெதுவாக ஓட முயன்றேன். அவர்களும் நடப்பது போல் ஓடினார்கள். நான் திரும்பிப் பார்க்காமல் என்முழு சக்தியையும் திரட்டிக்கொண்டு ஓடி என் வீட்டுக் கதவைத் திருகி உள்ளே பாயும் வரை என் முதுகில் குண்டு செருகுவது போல் கூசியது.

கதவை அறைந்து சாத்திய பின்னரும் தெருவில் ஆளரவம் கேட்டுக் கொண்டேயிருந்தது. கதவில் முதுகை முட்டுக்கொடுத்துக்கொண்டு நின்றேன். பின் அவர்களின் குண்டுகள் கதவைத்துளைத்துக்கொண்டு என் உடலை சல்லடை போடும் என்பதால் சட்டென விட்டு சுவருகே மறைந்து நின்றேன். அவர்கள் ஒட்டியிருக்கக்கூடும். வாயு வடிவில் கூட அவர்கள் குண்டு நுளையக் கூடும்.

எந்தச்சத்தத்தையும் காணோம். காற்று ஊளையிட்டுக்கொண்டு வீசியது. கரடிகளின் குறட்டை ஒலிகள் விகாரமாகிக் கொண்டு வந்தன.

மெதுவாக மேல்மாடிக்குப் போய் யன்னலோரம் நின்றேன்.

நீ 7000 மைல்களுக்கப்பால் வந்துவிட்டாய். இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே உன்னை ஒன்றும்பண்ண முடியாது.

இல்லை. அவர்களால் முடியும். எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விருப்பம்தான்.

இது என்ன? நாம் அவர்கள். அவர்கள் நாங்கள். நாம் அவர்களாகவும் அவர்கள் நாங்களாகவும். நான் குழம்பிப்போய் அவர்களாகிச் சிந்திக்கிறேனோ?

யன்னலுக்குள்ளால் வெளியே பார்த்தேன். எதிர்வீடுகளில் சில யன்னல்கள் ஒளி சிந்தின. ஒரு யன்னலில் டி.வி. வெளிச்சம் மின்னியது. இன்னொரு யன்னலில் ஒரு பெண் ஏதோ செய்துகொண்டிருந்தாள். நான் உளவு பார்க்க ஆரம்பித்தேன். மற்றொரு யன்னலில் என்னவள் தோன்றினாள்.

காதலும் போரும், வாழ்வும் போரும். சுதந்திரமும் போரும் ஒன்றுக்கொன்று எதிரென உதறித் தள்ளி விட்டுப்போன என்னவள். அக்கரையில் நின்று அனல் வெறிக்கப் பார்த்தாள்.

நான் என் நண்பன் AKயோடு இரகசியமாகத் தொடர்ந்த காதலை உளவுபார்க்கத் தொடர்ந்தேன்.

காதல்நங்கூரமறுந்த கட்டுமரம் போல் நாளெல்லாம் அலையோடு அலைந்து... அந்த வெப்பம் சுமந்து... அந்த வெப்பத்தின் கொள்ளிகளோடு நண்பனையும் அவன் காதலியையும்.

நண்பன் தொலைந்தான். போராளியும் தொலைந்தான். காதலும் தொலைந்து வாழ்வும் தொலைந்தது.

மக்களும் தொலைந்தனர்.

துப்பாக்கி தானே உயர்ந்தது. எதிரே அந்த யன்னல்களில் தோன்றிய பெண்களின் நிழல்களை நோக்கி.

துப்பாக்கி ஓயாமல் வெடித்து சடசடத்து செத்தது.

யன்னல்கள் எல்லாம் தேவதைகள் நிறைந்தனர். என் யன்னல் நேரே கைகளை நீட்டி ஓலமிட்டனர்.

என்னவர் எங்கே? என்னவர் எங்கே? நான் எதுவுமே செய்யச் சக்தியற்றவனாய்., எந்த ஆயுதமும் என்னிடம் இல்லாத நிர்வாணியாய்., உக்கிய இதயத்தோடு அவர்களைப்பார்த்தேன்.

அங்கே என்னவளும் இருக்கக்கூடும்.

தடித்த யன்னல் சீலையை இழுத்து மூடினேன். என அறைக்குள் நுளைந்து பிணம் போல் சரிந்தேன்.

ஏதாவது ஒரு கரடி என்னை நோட்டம் விடவும் கூடும். கண்ணை மூடி நித்திரையை அழைக்க பயமாக இருந்தது. அவர்கள் அவதார புருஷர்கள். உலகமெல்லாம் வியாபித்திருக்கிறார்கள் இங்கே என்னருகேயும்.

நான் குறட்டை ஒலிகளைக் கணக்குப் பார்த்தேன். குறைந்தும் கூடியும் ஒரு சீரற்று. நான் முயற்சியைக் கைவிடவில்லை.

அடித்துப்போட்ட மாதிரி உடம்பு. கால்களையும் கைகளையும் விரித்துப் போட்டபடி நிமிர்ந்து கிடந்தேன். கட்டிலோடு உடம்பை ஒட்டியது போல் எதையுமே அசைக்க முடியாதபடி செத்துப் போய்க் கிடந்தது. மூளை மட்டுமே வேலை செய்வது போலவும் இதரபகுதிகள் எதுவுமே இயங்கவில்லைப் போலும்

திடீரென என் உடம்பு அப்படியே மேலே பறக்க ஆரம்பித்தது. கரடிகளைக் கடந்து, கதவை, மாடிகளை, லண்டனைக் கடந்து எங்கோ வானத்தின் பரப்புக்குப் போனது. எந்த திக்கும் பார்க்கச் சக்கியற்று, காற்றுவெளியில் படுத்தபடியே, மேலும் கீழுமாய் பறந்துகொண்டு திரிந்தேன்.

பின் ஒரு புதிய சூழலுக்குள் நிமிர்ந்தபடி மேலும் கீழுமாய்... அது என்னை மறைத்து வைக்கும் ஒரு இருட்டுக்குள் ஒரு நிழல் உருண்டை. கருப்பைக்குள் சிசுபோல். நீருக்குள் மேலும் கீழும் அசையும் துகள்கள் போல் மனிதர்கள். தானியங்கிகளாய் மனிதர்கள் ஏதோவெல்லாம் செய்து கொண்டிருந்தனர். அவர்களைக் கூர்ந்து பார்த்தேன். அவர்கள் கண்களை மூடியபடியே.

சிலர் ஞானக்கண் பெற்றவர்கள் போல் சுட்டுக்கொண்டிருந்தனர். குண்டுகள் அங்கும் இங்கும் கிழித்துக் கொண்டு போயிற்று. சிலர் குண்டடிபட்டு மாண்டு கொண்டிருந்தனர்.

நான் குண்டுகளுக்கு ஒளிக்கத் தொடங்கினேன். மாறி மாறி நீந்தி மனிதர்களின் பின்னால் ஒளிந்து கொண்டு திரிந்தேன். பின் கண்களைத் திறந்திருப்பது சந்தேகத்திற்குரிய அபாயமென்றும் எல்லோரும் என்ன செய்கிறார்களோ அதையே நானும் செய்வது நல்லதென்றும் தோன்றியதால் கண்களை மூடினேன். பின் சாதல் சாத்தியம் என்பதால் மூடுவதுபோல் பாசாங்கு காட்டி ஒரு கிழவனின் பின்னால் நின்று அவன் இடுப்பைக் கெட்டியாகப் பிடித்தேன்.

கிழவன் என் கைகளைச் சுழற்றித் திரும்பினான். "உங்களுக்காக நாங்கள் செத்தது போதும்" என்றான்.

அதே கிழவன். அதே கண்கள். என் ஆன்மாவை எரித்த அதே பார்வை

என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை. அவன் என்னை என்னவும் செய்யலாம். அச்சம் பரவி உடலை இறுக்க சுழியோடி வேறிடம் போனேன். நண்பனா எதிரியா என்றறியா ஒவ்வொரு உடல்கள் பின்னும் மறையத் தொடங்கினேன்.

எம்மால் அழிக்கப்பட்ட ஒவ்வொரு ஜீவனும் இதற்குள் இருக்கக்கூடும்.

சீ... என் வெறிகொண்ட வாழும் ஆசை. .. நான் வாழவேண்டும். எல்லோரும் வாழ்வோம்.

பிடிவாதத்தோடு சும்மா இருந்த ஒரு மனிதனை உலுப்பினேன்.

சீ. அவனும் பாசாங்கோ என்னவோ கண்களை இறுக்கி மூடியிருந்தான்.

துப்பாக்கிகள்(?) இரக்கமற்றவை
நண்பனா எதிரியா என்றறியாதவை
மனிதர்கள் மடிந்து விழ மானிடம் சாம்பலாகிறது.

கத்தினேன். உரத்துக் கத்தினேன்.

துப்பாக்கிகளின் சடசடப்பு. விமானங்களின் குண்டுவீச்சு. ஹெலிச்சத்தம். என் குரல் எனக்கே கேட்கவில்லை. கத்திக் கத்தி அழுது அந்த மனிதனை உலுப்பினேன். கொலை செய்வதை நிறுத்துவோம். மனிதர்கள் வாழவேண்டும்.

அவன் பாசாங்கு நித்திரையில் இருந்த கண்களை மெதுவாகத் திறந்தான். என்னை அலட்சியமாகப் புழுவைப்போல், எதற்கும் உதவாததைப் போல், ஊரோடு ஒத்து வாழத் தெரியாத.... துரோகியைப் போல் பார்த்தான்.

அவன் கையில் துப்பாக்கி முளைத்தது. அவன் என்னைக் குறிவைத்து... ▢

நன்றி:
'இனியும் சூல் கொள்'




படிப்பகம்

www.padippakam.com



# பாலுமகேந்திரா: அழியாத கோலங்கள் முதல் சதிலீலாவதி வரை

யமுனா ராஜேந்திரன்

தமிழில் நல்ல சினிமா பற்றி எழுதுகிற எவருமே தவிர்க்க முடியாத படங்கள் இரண்டை பாலுமகேந்திரா கொடுத்திருக்கிறார். அழியாத கோலங்களும் வீடும் அவ்விரு படங்கள். (துரதிஸ்டவசமாக சந்தியாராகங்கள் பிரிட்டனில் பார்க்க கிடைக்கவில்லை)

இதுவன்றியும் ஆண் பெண் உறவு தொடர்பாக குறிப்பிடத்தக்க வெகுசனப்படங்களையும் அவர் கொடுத்திருக்கிறார்.

1)யாத்திரா(மலையாளம்)
2)ஓளங்கள்(மலையாளம்)
3)மூன்றாம் பிறை
4)மூடுபனி
5)வண்ணவண்ணப்பூக்கள்
6)உன் கண்ணில் நீர் வழிந்தால்
7)கோகிலா(கன்னடம்)

மூன்று படங்களை ஒரு ஆண் இரண்டு பெண்கள் உறவை சித்தரித்து(அவரே சொல்கிறபடி வெவ்வேறு கோணங்களில்) இயக்கியிருக்கிறார்.

1)இரட்டைவால்குருவி
2)மறுபடியும்
3)சதிலீலாவதி

இந்தப் படங்களில் மறுபடியும் படத்தின் மூலமாக ஹிந்தியில் மகேஸ்பட்டின் கதை இருக்கின்றது. மூன்றாம் பிறை தெலுங்கில் வசந்த கோகிலமாகவும், யாத்திரா தமிழில் கண்ணே கலைமானே ஆகவும் வெளியாகி இருக்கிறது. (இவைகளுக்கு அப்பால் சுமன் அர்ச்சனா நடித்த ஒரு மிக மோசமான தெலுங்குப் படமும் இயக்கியிருக்கிறார்).

பாலுமகேந்திரா தமிழ்ச்சினிமா / இந்தியச் சினிமா சூழலில் பெறும் முக்கியத்துவம் அவரது கதை சொல்லும் பாணியிலும் கமராவைக் கையாளும்(நிறம் தொடர்பாக: இயல்பான அழுத்தமான நிறங்கள் தவிர்ந்த வெளிர் நிறங்கள்) தனித்துவத்திலும் இயல்பான மனித நடத்தையைச் சித்தரிப்பதிலும் (அநேகமாக அழுத்தமான மேக்கப்பை முற்றிலும் தவிர்ப்பது) பொதிந்திருக்கிறது.

பாலுமகேந்திராவின் படைப்புலகம் மனிதனின் அரசியல்/பொருளியல் சார்ந்த சமூக மனிதனின் சமூக உறவுகள் பற்றியதல்ல (பெரும்பாலும்) தனிமனித உறவுகள்/ஆண் பெண் உறவுகள் பற்றியவை. வாழ்வின் மிக மெலிதான சந்தோச லட்சணங்கள் வலிதரும் லட்சணங்களை அவர் படங்கள் பேசுகின்றன. பாலுமகேந்திராவின் மனிதர்கள் முற்றிலும் மத்தியதரவர்க்கம் சார்ந்தவர்கள். அவர்களது உறவுச் சிக்கல்களும் பிரச்சனைகளும் முற்றிலும் மத்தியதரவர்க்கம் சார்ந்தவைதான்.

சமூகப்பிரச்சனை என்று அவர் எடுத்துக் கொண்டது நிறுவனங்களோடு மனிதர்கள் கொள்ளும் உறவில் ஏற்படும் பிறவுலக சமூக நிபந்தனைகளை நெருக்கடிகளை சித்தரித்தான ஒரே ஒரு படம் வீடு மட்டும் தான்.

இதுவன்றி பாலுமகேந்திராவின் படங்களில் அரசியலோ அதிகார நிறுவனங்களோ அதை எதிர்த்த மனிதர்களோ எந்தவிதமாகவும் இடம்பெறுவதில்லை. இவ்வமைப்போடு பிரச்சனை கொள்ளும் மனிதனின் வீழ்ச்சியோ எதிர்ப்போ நெருக்கடிகளோ பாலுமகேந்திராவின் படைப்புலகிற்குள் வருவதில்லை.

> பாலுமகேந்திராவின் படைப்புலகம் மனிதனின் அரசியல்/பொருளியல் சார்ந்த சமூக மனிதனின் சமூக உறவுகள் பற்றியதல்ல (பெரும்பாலும்) தனிமனித உறவுகள்/ஆண் பெண் உறவுகள் பற்றியவை. வாழ்வின் மிக மெலிதான சந்தோச லட்சணங்கள் வலிதரும் லட்சணங்களை அவர் படங்கள் பேசுகின்றன.

இவைகள் மட்டும் தான் ஒரு படைப்பாளியின் அக்கறைக்கு உரியவை என்கின்ற பார்வையை நான் மேற்கொள்ளவில்லை. ஆனால் பாலுமகேந்திராவின் மனிதர்களை இந்த நெருக்கடியைத் தவிர்த்து விட்டுத்தான் பார்க்க வேண்டும். இதற்கு ஒரேயொரு விதிவிலக்கு யாத்ராவின் நாயகன். வன்முறை அரசியலாளரென ஆள் மாறாட்டத்தில் பிடித்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வாழ்வே திசை மாறிப்போனவன்(பொலிஸின் சித்திரவதையை மிக அழுத்தமாக சித்தரித்த படங்களில் இதுவும் ஒன்று).

இதுவன்றி ஆண் பெண் உறவின் இடையில் ஏற்படும் பிரிவு புரிதலற்ற மனத்தூரம் மனோரீதியிலான ஆதிக்கக் காதல் போன்றவற்றையே இவரது படங்கள் வெளியிடுகின்றன. தவிர்க்கவே இயலாத சாதல் தரும் நெருக்கமான பிணைப்பு (வண்ணவண்ணப்பூக்கள்) போன்றவற்றையும் இவர் பேசுகின்றார்.

இவரது ஆண்களும் பெண்களும் மிகச் சாதாரணமான மத்தியதர வர்க்க ஆணும் பெண்ணும். பிரச்சனைகளும் அத்தகையவை தான். இரட்டைவால் குருவியில் இரட்டை உறவின் காரணமாக காட்டப்படுகிற குழந்தை ஆசை பொருத்தமானதாக அமைவுபெறவில்லை. சதிலீலாவதியில் ஹீரா பாத்திரத்தின் குணச்சித்திரமும் மறுபடியும் ரேவதியின் இறுதிக்காட்சி முடிவும் தமிழ் வெகுசன சினிமாவின் அழுத்தமான வேறுபட்ட திசையைக் காட்டுபவை.

மூன்றாம் பிறை பெண்ணைக் குழந்தையாக, மனோவளர்ச்சியற்ற குழந்தையாக இருப்பதில் உள்ள அனுகூலங்களை யோசிக்கும் ஆணுக்கு அவனது அபிலாசைகளுக்கு ஒரு பிரதியீடு. பாலுமகேந்திராவின் எல்லா ஆண்களுமே பெண்கள் submissive ஆகப் போவதில் சந்தோசம் இருக்கின்றது. பெரும்பாலான பெண்கள் கலகம் செய்கிறவர்களாக இல்லை. துக்கத்தை சுமப்பவர்களாக காத்திருப்பவர்களாக அபலைகளாகவே இருக்கிறார்கள். இரட்டைவால்குருவி. மூன்றாம் பிறை, ஓளங்கள், மூடுபனி, கோகிலா, வண்ணவண்ணப்பூக்கள் எல்லாமே அப்படித்தான். விதிவிலக்கு இரண்டே இரண்டு பேர் மறுபடியும் ரேவதியும் சதிலீலாவதி ஹீராவும்.

உள்ளது உள்ளபடி வாழ் க்கையைப் பார்க்கிறவர்கள், பிரக்ஞை அற்று வாழ்க்கையை வாழ்கிற வர்கள் உடனடியாகவே பாலுமகேந்திராவின் ஆண் பெண் உறவுச் சிக்கல்களுக்குள் ஈடுபடமுடியும். அநேகமாக இவரது எல்லாப் படங்களும் அப்படித்தான்.

அடூரின் படங்களிலுள்ள அரசியல் பரிமாணமோ அரவிந்தனின் படங்களிலுள்ள வரலாற்றுத் துக்கமோ ஆன்மீக விசாரணையோ கொண்டது அல்ல பாலுமகேந்திராவின் படங்கள். தமிழ் சினிமா ஏற்கனவே கண்டிருக்கிற ஜெயகாந்தனின் கீழ்த்தட்டு உலக மனிதர்கள் பாலுவின் படங்களில் இல்லை.

பாலுவின் படங்கள் பிரெஞ்சுப் படங்களின் ஆண் பெண் உறவுச் சித்தரிப்புப் படங்களின் பாதிப்பிற்கு உள்ளானவை. மிகச் சாதாரணமாக சொல்ல வேண்டிய ஆண் பெண் உறவுகளைக் கூட நிதானமாக சிக்கலுக்கு உள்ளாக்கி பேசும் படங்கள் பிரெஞ்சில் நிறைய உண்டு. லூயிமெல்லின் டமேஜ்ட் படம் இத்தகைய வகைக்குள் வரும் படம்.

பாலுமகேந்திராவை, அவரது படங்களை, அவரது அணுகுமுறையை, அவரது படைப்புலகை உற்சாகப்படுத்தி பேசிக்கொண்டிருப்பது தமிழ் சினிமாவை அதனது பன்முகப்பட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்லாது.

பாலுமகேந்திராவின் அழியாத கோலங்கள் உலக சினிமாவின் அமரசிருஷ்டிகளான cinema paradisso போன்றவற்றோடு பேசப்பட வேண்டிய படம்தான். வீடு முக்கியமான படம் தான் சந்தேகமில்லை. ஆனால் இந்திய/தமிழ்வாழ்வு மிகுந்த அரசியல் சிக்கல்களையும் சமூக நெருக்கடிகளையும் கொண்டிருக்கிறது. பாலுவின் அக்கறைக்குள் இந்த நெருக்கடிகள் வரவேயில்லை. அவர் சமீபத்தில் கொடுத்த படங்கள் எல்லாமே திரும்பத்திரும்ப அவரது படங்களை அவரே பிரதி செய்தவைதான்.

பாலுமகேந்திராவின் சினிமா அரசியல் சிலவேளை அவரை அடுக்கு எதிராக சுஜாதாவோடு சேர்ந்து அவரை நிற்கச் செய்கிறது. அடூரின் படங்களில் தொழில்நுட்ப உபாயங்களில் பிழையிருக்கலாம். ஆனால் அவரது படைப்புலகம் உக்கிரமானது என்பதை மறுத்து விட முடியாது. 'ஸப்டைட்டில் போட்டு விற்றுவிடுகிறவர்கள்' என்று சுஜாதாவோடு சேர்ந்து அடூரை அலட்சியப்படுத்தி விடமுடியாது.

வாழ்வை, மனித உறவுகளை மிக நெருங்கிப் பார்க்கிற ஒரு படைப்பாளி சக படைப்பாளிகளின் மீது விமர்சனங்களை மேற்கொள்ளும் போது மிகுந்த பொறுப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும். மணிரத்தினமோ அடூரோ எவராயினும் இது பொருந்தும். தமிழ் சினிமா விமர்சனம் என்பது வெறும் அரசியல் ரீதியான குறுங்குழுவாத நோக்குக் கொண்டது. பாலு இந்த அரசியலில் சிக்கிவிடக் கூடாது. இராஜேந்திரக்குமார், இராஜேஸ்குமார், சுஜாதாவோடு சேர்ந்து நிற்கிற அதேமனிதர் தீவிர இலக்கிய மனப்பான்மையுடன் படைப்புகள் செய்வதற்கான சாத்தியங்கள் மிக மிகக் குறைவு.

பாலுமகேந்திரா சத்யஜித்ரேயை தனது ஆசான் என்று சொல்கிறார். சத்யஜித்ரேயின் ஆளுமை அனைத்தும் தழுவி விரிந்து சென்றது. அவரது ஜனசத்துருவும் அகார்துக்கும் தீவிரமான அரசியல் பிரக்ஞை உள்ள படங்கள். அதிகார வர்க்கம், நிறுவனங்கள், அறிவியல் போலித்தனங்களுக்கு எதிரானவர் சத்யஜித்ரே. விமர்சனங்களை பொறுப்புடன் செய்தவர். சக படைப்பாளிகளோடு ஆக்கபூர்வமான உறவு கொண்டிருந்தவர். தனது படைப்புலகை அடிக்கடி உடைத்துக் கொண்டு மாறிக்கொண்டே இருந்தவர்.

பாலுவின் மிகப்பேசப்பட்ட படங்களாக இருந்தவை அழியாத கோலங்களும் வீடும் எனில் காரணங்கள் என்ன? ஒன்று மனித உறவின் குறும்பும் பின்னை நாள் ஏக்கமும் பற்றி அற்புதமாகச் சொன்னது. மற்றது ஒரு நிலவும் மத்தியதர வர்க்க சமூகப் பிரச்சனையை அதனது நெருக்கடிகளுடன், மத்தியதர வர்க்க ஆண் பெண் உறவின் ஆரோக்கியப் பார்வையுடன் சொன்னது.

பாலுமகேந்திரா இதையும் மீறிச் செல்ல வேண்டும். வன்முறையும் நெருக்கடியும் பேரழிவும் நிறைந்த உலகின் இடையில் வாழத்தகப்பட்ட கலைஞன் இவைகளை படைப்பில் தரப்பொறுப்புள்ளவன். ஆனால் பாலு திரும்பத்திரும்ப பின்னோக்கிப் போகிறார். மிகச் சமிபத்திய உதாரணம் தமிழ் சினிமா நகைச்சுவைக் கூத்தின் தொடர்ச்சியாக அவரும் ராமன்அப்துல்லா மாதிரி படம் எடுத்தது. பாலுமகேந்திரா தனது எல்லைகளை விரித்துக் கொள்ள வேண்டும். அர்த்தமற்ற தமிழ் சினிமா, தென்னிந்திய சினிமா அரசியல் அவரை முடக்கிவிடும். அதையும் அவரது எல்லைகளையும் அவர் தாண்டிச் செல்லவேண்டும். தமிழ் சினிமாவும் அவர் மூலம் அவ்வேளை தனது எல்லைகளை விசாலப்படுத்திக் கொள்ளும்.

## இன்றைய யாழ்ப்பாணம்

என்ன அமைதியாக
எல்லோரும் வாழ்ந்த தேசம்
இன்று இப்படியானதே!
ஓர் ஞாபகம்
70 களாக இருக்க வேண்டும்
தினகரன் விழா
முத்தவெளி நிகழ்வுகள்
சற்றடே றிவியு பேப்பர்
எவ்வளவு கலகலப்பு
இன்று
சொந்த மக்களையே
தொலைத்து விட்ட
தேசமாச்சே!

என்ன வெட்கமடா?
தாயின் கருவுக்கு கூட
கல்வி தானே
சிந்தனை!
அது ஒரு அழகிய யாழ்ப்பாணம்
நேற்று
இன்று அங்கு
ஒருவரும் இல்லை
ஒன்றும் இல்லை
எல்லாம் தொலைந்து போயின
சந்திகள் தோறும் சென்றிகள்
சென்றிகள் தோறும்
இலக்கு தேடும் துப்பாக்கி
குளக்கட்டுப் போல
பண்டுகள்
நீண்ட கியூ!
எண்ணிக்கையற்ற
சோதனைச்சாவடி!
எங்கள் தேசம் மீது
எமக்கே
திணிக்கப்பட்ட
ஜீவிதமாச்சே!
கதை சொல்ல வெட்கப்படும்
கற்பிழந்த கிரிஷாந்திகள்!
நூற்றுக் கணக்கில்

கிராமங்கள் தோறும்
கிரமமாக தொலைந்து போகும்
காணாமல் போதல்
தேடி அலையும் ஒப்பாரி அவலம்!
மீண்டும் நிமிர்ந்து
உட்கார நினைக்கும்
ஒரு அழகிய தீபகற்பம்
அடிக்கடி தாக்குதல்களால்
குப்புற விழுகிறது!
எல்லாம் பரிதாபம் தான்
என்ன அமைதியாக
எல்லோரும் வாழ்ந்த தேசம்
இன்று இப்படியானதே!

S T சண்

படிப்பகம்

www.padippakam.com



# ஆரிராரிரோ...ஆரிராரிரோ...

தாய்மைப்பேறு என்பது ஒரு பெண்ணை உன்னத நிலைக்கு உயர்த்துவது. பிரசவம் என்பது புனர்ஜென்மம். குழந்தையின் முகத்தைப் பார்க்கும்போது ஏற்படும் குதூகலத்துக்கு ஒரு அளவே கிடையாது.

இவைகளெல்லாம் சரிதான்.

ஆனால் பிரசவம் ஒவ்வொன்றும் பெண்ணின் அழகை சீர்குலையச் செய்துவிடுகிறது என்பதையும் அவளது கட்டுடலின் கவர்ச்சியை அழியச்செய்து விடுகிறது என்பதும் உண்மை தான். பிரசவம் பெணணின் வயிற்றில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது. அது வெளியில் தெரிகிற ஒன்றாக இல்லாவிட்டாலும் பெண்ணின் உள்மனதை சங்கடத்தில் ஆழ்த்திவிடுகிறது.

அது-

அடிவயிற்றிலும் இடுப்பைச் சுற்றிலும் தொடைகளிலும் பிரசவத்திற்கு பின்பு உண்டாகின்ற வெள்ளிக்கோடுகளாகும். இதை ஆங்கிலத்தில் Strech Marks என்கிறார்கள்.

பிரசவமாகி ஒரு சில தினங்களில் இந்த வெள்ளிக் கோடுகள் முதலில் நீலம் கலந்த சிவப்புக் கோடுகள் போல அடிவயிற்றிலும் இடுப்பைச் சுற்றிலும் தொடையிலும் தெரிய ஆரம்பிக்கும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சிவப்பு நிறமாகி முடிவில் வெள்ளிக் கோடுகளாக மாறிவிடும். மலை அருவியை தூர இருந்து பார்க்கும்போது அது வெள்ளிநூல் போல தெரிவது மாதிரி இந்தக் கோடுகள் தெரிய ஆரம்பிக்கும். ஒன்றையடுத்து பல பிரசவங்கள் உண்டாகிறபோது ஸ்திரமாக நிலைத்துவிடும். இது எந்தவிதப் பெண்களுக்கு மனசங்கடத்தைக் கொடுக்கும் என்றால், தொப்புள் தெரிய அடிவயிற்றில் புடவை கட்டும் நவநாகரிகமான பெண்களுக்கு அப்படிப் புடவை கட்டும் பொழுது வெளியே தெரியும். அது அவர்களுக்கு தங்கள் வயிற்றின் அழகு குறைந்துவிட்டது போலத் தெரியும்.

**கர்ப்பமான பெண்களின் தோல் வறட்சியடைந்தோ சத்து குறைந்தோ ஒளி குன்றியோ போகுமானால் பெண்ணின் அடிவயிறு, தொடை ஆகிய இடங்களில் இந்த வெள்ளிக் கோடுகள் மிகவும் சுலபமாகத் தோன்றத் தொடங்கிவிடும்.**

முதலில் இலேசான கோடாகத் தெரிகின்ற இந்த வெள்ளிக் கோடுகள் சிறிது நாட்களில் தடிப்புற்று மேடாக தோன்ற ஆரம்பிக்கும். சிலசமயங்களில் அந்த தடித்த மேடுகளில் அரிப்புத் தோன்றி கஷ்டப்படுத்தும். சில பெண்களுக்கு இக கோடுகள் நிரந்தரமாக நிலைத்து விடும். சிலருக்கு மிகவும் அபூர்வமாக படிப்படியாக குறைந்து சிறு சிறு கோடுகளாக மாறும். இந்த வெள்ளிக் கோடுகள் என்பது பிரசவத்திற்குப் பின்பு எல்லோருக்கும் ஏற்படக்கூடிய ஒன்றே.

இது எப்படி ஏற்படுகிறது?

ஒரு பெண், குழந்தை உண்டாகியிருக்கின்றபொழுது அவளது இரத்தத்தில் சர்க்கரையின் அளவு பெரிய மாற்றத்திற்கு உள்ளாகும். தோல் இந்த மாற்றத்திற்கு உட்படும்போது தோலின் வளர்ச்சியும் அதன் பராமரிப்பும் மாறுதலுக்குள்ளாகின்றது. இந்த சர்க்கரையின் அளவு மாறுபடுவதற்கு காரணம் அப்போது அவள் உடலில் அதிகமாக சுரக்கும் புறொஜெஸ்டிரான் போன்ற ஓமோன்கள் தான் அப்போது கருவுற்ற பெண்ணின் அடிவயிறு, பிட்டம், தொடை, மார்பகம் மற்றும் கை கால் மேற்புறம் ஆகிய இடங்களில் இந்த வெள்ளிக் கோடுகள் காணப்படத் தொடங்கும்.



குழந்தை வயிற்றினுள் சினை முட்டையிலிருந்து குழந்தையாக வளரத் தொடங்கும்பொழுது அதன் வளர்ச்சிக்குத் தக்கபடி தாயின் கருப்பை பெரிதாகத் தொடங்குகின்றது. அப்போது தாயின் வயிறும் கருப்பையின் வளர்ச்சிக்குத் தக்கபடி பெரிதாகத் தொடங்குகின்றது. வயிற்றிலுள்ள தோல் தனது விரிந்து சுருங்கும் இயற்கைத் தன்மையால் விரிந்து கொடுக்க ஆரம்பிக்கின்றது. தோல் இப்படி தன் இயற்கையான அளவில் இருந்து விரிகின்றபொழுது தோலின் கீழே உள்ள அடுக்குகள் வெடித்து வயிற்றுத் தோலின் மீது கோடுகளை உண்டாக்குகின்றன. இக்கோடுகள் விரைவில் உடல் எடை கூடுகின்ற பெண்களின் வயிற்றில் மிக விரைவாக உண்டாகி விடும்.

ஒரு பெண் கர்ப்பமடைந்த நான்காம் மாதம் முதல் ஏழாவது மாதம் வரை இக்கோடுகள் உண்டாகின்றன. குழந்தையின் அதீத வளர்ச்சி காரணமாக சில பெண்களுக்கு எட்டு அல்லது ஒன்பது மாதம் வரையில் கூட இந்த வெள்ளிக் கோடுகள் உண்டாகும்.

இந்த வெள்ளிக் கோடுகள் வயிற்றில் தொடையில் எல்லாம் தோன்றாதிருக்க வேண்டுமானால்-

**ஸ்வப்னா**


கர்ப்பமான பெண்கள் தங்கள் உடல் எடை கூடாது பார்த்துக் கொள்ள வேண்டும். கர்ப்பமுற்ற 12 வாரங்களில் உடலில் எடை ஒரே சமயத்தில் கூடிவிடாது பார்த்துக் கொள்ளவேண்டும். உடலின் எடை சிறிது சிறிதாக கூடும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். 12 வாரங்களுக்குப் பின்பு 17வது வாரம் முத[ல்] 18 வாரங்கள் வரை உடல் எ[டை] சிறிது அதிகமாக கூடுவது தவிர்க்[க] முடியாதது.

கர்ப்பமான பெண்களின் தோ[ல்] வறட்சியடைந்தோ சத்து கு[றை]ந்தோ ஒளி குன்றியோ போகு[மா]னால் பெண்ணின் அடிவயிறு தொடை ஆகிய இடங்களில் இந்[த] வெள்ளிக் கோடுகள் மிகவும் சுல[ப]மாகத் தோன்றத் தொடங்கிவிடு[ம்]. அவர்கள் துத்த நாகச்சத்து நி[றை]ந்த வெங்காயம், முட்டை, பழங்க[ள்] பார்லி, மீன் நிலக்கடலை ஆகி[ய]வற்றை அடிக்கடி சாப்பிட்டு வ[ர] வேண்டும்.

கர்ப்பமாகி இருப்பது உறுதிய[ா]கத் தெரிந்ததும் பெண் ஆலிவ் எ[ண்]ணெய்யை வெள்ளிக் கோடுக[ள்] தோன்றக் கூடிய அடிவயிறு, புட்ட[ம்] தொடை ஆகிய இடங்களில் தட[வி] வர வேண்டும். பேபி ஆயில் என்[ற] ஒரு எண்ணெயையும் தடவி வ[ர]லாம்.

விற்றமின் A,B,E,F போன்[ற]வைகளாக உள்ள கிறீம்களா[க]ப் பார்த்து வாங்கி வயிற்றின் மீ[து] தடவிவர வேண்டும். விற்றமின் A சருமத்தின் வடுக்கள், இழப்புக்கள் ஆகியவற்றை சரி செய்துவிடும் ஆ[ற்]றலுள்ளது. விற்றமின் B தோலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றது. விற்றமின் E புதுத் தோல் உண்டாகச் செய்கின்றது விற்றமின் F தோல் பாதுகாப்பில் பெரும் பங்கு வகிக்கின்றது.

இந்த விற்றமின் நிறைந்த கிறீம்களை வாங்கி வெள்ளிக் கோடுகள் காணப்படும் இடங்களில் தொடர்ந்து தேய்த்து வர, வெள்ளிக் கோடுகள் முற்றிலும் மறைந்து போகா விட்டாலும் 75% ஆவது மறைந்துவிடும்.

ENGINE TEC MOTORS
339C London Road, Mitcham, Surrey CR4 4BE
We offer facilities ● Servicing, ● Clutches, ● Brakes, ● Car Electrics, ● Overhauls, ● All types of Repairs ● Pre MOT Checks

சகலவிதமான கார் திருத்த வேலைகளையும்
நம்பிக்கையானமுறையிலும், குறுகிய கால நேரத்திலும் செய்து தரப்படும்.
Contact: VEL or RAJAN
Tel: 0181 640 1230, Mobile: 0860 770945, 0860 226476

www.padippakam.com



# மாணவர் பக்கம்

## புதிய சாதனை மணிக்கு 714 மைல்



மணிக்கு 714 மைல் வேகத்தில் கார் ஓட்டி பிரித்தானியாவைச் சேர்ந்த Andy Green புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். ராணியின் பாராட்டைப் பெற்ற இவர் "செய்வதற்கு இன்னும் இருக்கிறது" என்று தனது ஊக்கவுணர்வை வெளிப்படுத்தினார். ஆம் இவரது வேகம் (பாலைவன நிலமைப்படி) ஒலியைவிட 35mph குறைவானதாகும். ஒலியின் வேகத்தையும் மிஞ்சுவதே இவரின் குறிக்கோள்.

இவர் Noble என்பவர் ஏற்படுத்தியிருந்த மணிக்கு 633 மைல் என்ற சாதனையையே முறியடித்திருக்கின்றார். இந்தச் சாதனை 14 வருடங்களின் பின் முறியடிக்கப்பட்டிருக்கின்றது.

## HMT Computer

Mocrosoft தனது Window 98 இனை முடிக்கும் தறுவாயில் உள்ளபோது அமெரிக்க விஞ்ஞானிகள் யாருக்கும் இதுவரை வெளிவிடப்படாத புதிய Operating System மூலம் முன்னணியில் நிற்பதாக New Scientist தெரிவிக்கின்றது.

Hybrid Multithreaded (HMT) என அழைக்கப்படும் இந்தப்புதிய உத்தியே இவ்வெற்றியின் அடிப்படை. இதன் ஆராய்ச்சியாளர்கள் செக்கனுக்கு 1000 Trillion Floating Point Operation ஐச் செய்யப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். அதே நேரத்தில் இன்றைய Super Computer இனால் 1 Trillion Operation ஐயே செய்ய முடியும்.

எவ்வாறாயினும் HMT Computer முழுவதுமாகத் தயாரிக்கப்பட இன்னும் 10 வருடங்களாவது செல்லும் என ஆராய்ச்சியாளர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சிந்தனை வெளியில்...

**துளி-1**

பொய்களைப் புதைக்க
புதைகுழி தோண்டுங்கள் -அங்கு
உண்மைகள் உதயமாகும்.

**துளி-2**

சிந்திக்க மறுப்பவனுக்கு
சிலந்தி வலை கூட
சிறைக்கம்பியே.

**துளி-3**

பொன்னைக் கண்டவுடன் வாய் திறக்கும்
பெண்ணைக் கண்டவுடன் கண் திறக்கும்
மண்ணைக் கண்டவுடன் இவையிரண்டும் மூடும்
உண்மை உணர்வு இவை மூன்றையும் கண்டவுடன்
மென்மையாக உயிர்த்தெழும்

– கிங்ஸ் கிருபா

## எலக்ரோனிக் வழிகாட்டி நாய்



இந்த வழிகாட்டி நாய் குரைக்காது, கடிக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் திறமையாக வேலைசெய்யக் கூடியது. University of Michigan College இலுள்ள ஆராய்ச்சி கூடத்திலேயே இந்த Robot முயற்சி ஆரம்ப வெற்றி கண்டுள்ளது.

Johann Borenstein என்பவரே இவ்வெற்றியின் பின்னாலுள்ள நபர். 3.5kg எடையுடைய Guide-Cane பெருவிரலால் கட்டுப்படுத்தக் கூடிய Joystick உடன் கூடிய தடியையும் இரண்டு சக்கரத்தில் சுழலக் கூடிய ஒரு வண்டியில் Sensor ஐயும் கொண்டுள்ளது.

கண் தெரியாதவர் கருவியைத் தள்ளிச்செல்லும் போது தடைகள் தென்படும் போது Sensor அத்தடையைச் சுற்றிச்செல்ல வழிகாட்டுவதுடன் பயணியின் திசை மாறாமலும் பார்த்துக் கொள்கிறது.

இம்முயற்சி பூரண வெற்றி காணும்போது சாதாரணமாக வீதிகளில் இவற்றைப் பார்க்க முடியும்.

## உணர்வுகள்

வைஷ்ணவன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான். அருகே கடதாசிகளும், வேறு சில எழுதுகருவிகளும் பரவிக்கிடந்தன. எரிந்து கொண்டிருந்த மின்விளக்கு அவனது தனிமைக்குத் துணையிருந்தது.

வைஷ்ணவன் 'உணர்வுகள்' பத்திரிகையின் துணை ஆசிரியர். புகைத்தலில் இருந்து மக்களை விடுவிக்கும் முகமாக உலகளாவிய ரீதியில் நடாத்தப்படும் 'புகைத்தல் இறப்பு' நாளிற்காகக் கட்டுரை ஒன்றை வரைவதில் அவன் சிந்தனை நிலைத்திருந்தது.

இப்புகைத்தலினால் எத்தனை எத்தனை தொல்லைகள், பண அழிவு, எத்தனை வீடுகளில் அடுப்புக் கூட புகைவதில்லை. சில உதடுகள் கூட இணைய மறுப்பதும் இதனால் அல்லவா? இதனால் சுற்றாடல் கூட மாசடைகின்றது. பணவிரயத்துடன் மட்டுமல்லாது சிலவேளையில் சில உயிர் விரயங்களுக்கும் இப்பழக்கம் துணைபோகின்றது. இதை எப்படியாவது குறைக்க வேண்டும். இவற்றை எடுத்துச் செல்லும் வகையில் அவன் கட்டுரை எழுத வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

பலமணிநேரமாகியும் எழுத எடுத்த கடதாசி வெறுமையாகவே இருந்தது. பேனையின் தலையில் தோன்றிய மை கூட காய்ந்துவிட்டது சில இலட்சியக் காதல்கள் காய்வது போல. அவன் சிந்தனை தொடர்ந்தது. இந்த மனிதர்களை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும். பேனை எனும் ஆயுதம் ஆசிரியன் என்னும் போராளி இழப்புக்களைத் தவிர்த்திட கட்டுரை என்னும் களம் புகத் துடிக்கின்றான். உணர்வுகள் தான் துள்ளி எழுந்து இவ்வழிவைத் தடு தடு என்றது. ஆனால் அவனது மூளையும் கையும் செயல்பட மறந்திருந்தன. அவற்றிற்கும் கூட இன்னும் உரிமை கிடைக்கவில்லைப் போலும்.

சிந்தனை சில மணித்தியாலங்கள் வரை நீடித்தது. இறுதியாகப் புகைத்தல் என்னும் அடிமை விலங்கை மக்களிடம் இருந்து விடுவித்திட, இறுதியாக ஒரு முடிவிற்கு வந்தவன் போல் சட்டைப் பையில் கையை வைத்து எடுத்ததை வாயில் வைத்துக் கடித்தான். தீக்குச்சி ஒன்று தனது இழிவான செயலைச் செய்வதற்காக ஒருமுறை இளித்து அணைந்தது. வைஷ்ணவன் வாயில் எரிந்து அழியும் பொருளால் அவன் உடலெங்கும் ஒரு புதிய உணர்வு பரவியது. மனமது தாளம் போட, எழுத மறுத்த கை இப்போது பேனை பிடித்து கடதாசி என்னும் மேடையில் நடமாடியது. ஆம் அவன் வாயில் சிகரெட் எரிந்து கொண்டிருந்தது, மற்ற சிகரெட்டுக்களைத் தடுப்பதற் காக.

-கிங்ஸ் விச்சு

Raj Puspanandan

TRUST TRAVEL LIMITED
3RD FLOOR
205 WARDOUR STREET
LONDON W1V 3FA
ENGLAND

ATOL 74234
IATA 91245770

TEL: 0171 287 3200
FAX: 0171 287 3111

படிப்பகம்

www.padippakam.com



# வெளி


When she deserves
only the best......

SPECIALISTS
IN 22CT GOLD HALLMARKED JEWELLERY
AND EXCLUSIVE DIAMOND JEWELLERY

Mulji's

உங்கள் விருப்பத்திற்கேற்ப தாலிக் கொடி, வைரக் கல் தோடு,
அட்டியல், பதக்கம் சங்கிலி, மெட்டி, மோதிரம்
Thali & Kodi made to order
Naclune cut bangles, Stone Earrings, Padakkam, Atyal, Baby bangles, Sovereigns
........*Visit us for a variety of special offers*

*Fascinating beauty*
*Plus real value*
*Gift some golden memories*
*this festive season*

216-219 UPPER TOOTING ROAD, LONDON SW17 7EW
TEL: 0181-767 8818


## ஸ்கொட்லாந்திற்கு தமிழீழ ரயில்

300 வருடங்களின் பின் ஸ்கொட்டிஷ் தேசம் தனது சொந்த நாடாளுமன்றம் அமைக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றது. பொதுநலவாய அரசுகளின் தலைவர்கள் 25ம் திகதி ஒக்டோபர் மாதம் 'எடின்பறோ' வில் ஒன்று கூடுகிறார்கள்.

இங்கு தமிழ்த் தேசியத்தை ஒடுக்கிவரும் சிங்கள இனவாத அரசின் தலைவி சந்திரிகாவும் வரவிருக்கிறார்.

இந்நாளில் இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளைப் பொதுநலவாயத் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு வருமுகமாகவும் ஸ்கொட்டிஷ் தேசத்துடனான தமிழ் தேசத்தின் நட்புறவை வளர்க்குமுகமாகவும் தமிழீழ ஸ்கொட்லான்ட் நட்புறவு புகையிரத வண்டி யாத்திரை UTO வினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ரயில் இம்மாதம் 25ம் திகதி காலை 7 மணிக்கு Kings Cross Station இலிருந்து புறப்படும்.

## புராதன மழைக்கான காட்டில் – தீ
### தென்கிழக்கு ஆசியாவில் திக்குமுக்காட்டம்

யூலை மாதத்தில் இந்தோனேசியாக் காட்டில் மூண்ட நெருப்பு தென்கிழக்கு ஆசிய நாடுகளை திக்குமுக்காடச் செய்துள்ளது. 150 மில் லியன்கள் வயது கொண்ட புராதன மழைக்கான காட்டில் மூண்ட தீ இந்தோனேசியாவில் மட்டும் இது வரை 800ஆயிரம் ஏக்கர் காடுகளை எரித்துள்ளது.

மற்றும் அந்த நாடுகளின் காடுகளிலும் பரவிய நெருப்பும், சேர்ந்து உருவாகிய நச்சுப் புகையும் மலேசியாவில் இருந்து இந்தோனேசியா மேலாக பிலிப்பைன்ஸ், தாய்லாந்து வரை பல லட்சம் மக்களை உயிர் ஆபத்தில் திக்குமுக்காடச் செய்தது. மேற்படி காட்டுத் தீயில் உருவாகிய புகையும் நச்சு மணமும் தென்கிழக்கு ஆசியாவை மிகவும் பாதித்துள்ளது.

## அல்ஜீரியாவில் படுகொலைகள்

அல்ஜீரியாவில் அப்பாவி மக்கள் மீதான கொடூரமான தாக்குதல்கள் தொடருகின்றன. செப்ரம்பர் நடுப்பகு தியிலும் இறுதியிலுமாக 300 மக்கள் படுகொலை செய்யப்பட்டுள் ளனர். இத்தாக்குதலை செய்தவர் கள் இஸ்லாமிய பயங்கரவாதிகள் என மேற்குலகச் செய்திகள் கூறுகின்றன. அல்ஜீரியாவில் 91ம் ஆண்டு டிசம்பரில் நடந்த தேர்தலில் இஸ்லாமிய முன்னணி பெரும் வெற்றி பெற்றது. ஆனால் 92ம் ஆண்டு ஜனவரியில் அரசு அதிகாரத்தை இராணுவத்தினர் பலவந்தமாக கைப்பற்றி னர் விளைவு இதுவரை 60,000 உயிர்களை பலிகொண்டுள்ளது.

சென்ற இதழில் எமது பத்திரிகை முகவரியில் ஏற்பட்ட அச்சுப் பிழைக்கு வருந்துகின்றோம்.
சரியான முகவரி:

VELI
P.O. Box 14936, London N9 OWB UK


தாயக மண்ணில் அல்லலுறும் அநாதைப் பிள்ளைகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக
சர்வதேச தமிழ் மாணவ மன்றத்தினர் வழங்கும்








# கல்லூரிப் பூக்கள் 97

## கலை நிகழ்ச்சிகள்

க.பாலேந்திராவின் நெறியாள்கையில்
★ மெய்ச்சுடரே... (கவிதா நிகழ்வு)
Tamil Vibration வழங்கும்
★ மேற்கத்திய இசை நடனம்
பல்கலைக் கழகக் கலைஞர்கள்,
லண்டன் முன்னணி இசைக்குழுவினருடன்
இணைந்து வழங்கும்
★ இன்னிசை விருந்து
பல்கலைக் கழக மாணவிகள் வழங்கும்
★ பரதநாட்டியம்
மற்றும் பல இனிய நிகழ்ச்சிகளுடன்
முதன் முறையாக இலண்டனில்
ஒருங்கிணைந்த மாணவ மனங்களின் உணர்வுகள்
அரங்கேறுகின்றன.

பிரவேசம்:
தனிநபர் £5.00
குடும்பம் £15.00 (நால்வர்)

காலம்:
30 November 1997
ஞாயிறு மாலை 6.00 மணி

இடம்:
Ealing Town Hall
New Broadway, Ealing, London W5
(Nearest Tube Station: Ealing Broadway)

*'நாளைய பூக்களின் மலர்விற்காய் இன்று மலரும் மாணவ பூக்களிற்கு உரமிடுவோம்'*

ISS

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்: 0956 301 153/ 0956 498642/0958 437 417/ eb 220@ city.ac.uk